7

7/3-52

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

چھ باتیں

தப்லீகுக்குரிய

# ஆறு திட்டங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - JUL 1959
MADRAS

தமிழாக்கம்:
மௌலவி ஹாஜி ஷர்புத்தீன் ஆலிம் (ஜமாலி)
பேகம்பூர், திண்டுக்கல்.

★

வெளியிடுவோர்:
மத்திய தப்லீக் ஜமாஅத்,
திண்டுக்கல்.

[ விலை அணா 10

Q7:3
N52
111479

چھ باتیں

தப்லீகுக்குரிய

# ஆறு திட்டங்கள்


தமிழாக்கம் :

மௌலவீ ஹாஜி ஷரபுத்தீன் சாஹிப் (ஜமாலி)

பேகம்பூர், திண்டுக்கல்.


★


வெளியிடுவோர் :

மத்திய தப்லீக் ஜமாஅத்,

திண்டுக்கல்.

ஜூன் 1952]  [விலை அணா 10

# பொருளடக்கம்


1. முன்னுரை
2. மதிப்புரை
3. ஆறு திட்டங்கள் .... .... .... 1
4. ஆறு நம்பர்கள் (1-வது கலிமா) .... 5
5. இரண்டாவது தொழுகை .... .... 10
6. மூன்ருவது கல்வியும் தியானமும் .... 13
7. முஸ்லிமை கண்ணியப்படுத்துவது .... 18
8. ஐந்தாவது எண்ணத்தைப் பரிசுத்தப் படுத்துவது 21
9. ஆருவது காலத்தை ஒதுக்குவது .... 24
10. அனுவசியமானவைகளை விடுவது ... 28
11. பிரயாண ஒழுக்கமுறை .... .... 32
12. அமீருடைய கட்டளைகளை .... .... 34
13. கல்வித் திட்டம் .... .... .... 38
14. 'தப்லீக் கஷ்த்' .... .... .... 44
15. அமீருக்குக் கீழ்ப்படிதல் .... .... 48
16. சாப்பிடுவதின் ஒழுங்கு ... .... 49
17. உறக்கத்தின் ஒழுக்கம் ... .... 51
18. உளூவும் தொழுகையும் .... .... 52
19. பிரயாணத்தில் சுன்னத்து தொழுவது .... 54
20. பல விஷயங்கள் .... .... .... 55
21. பிரயாணச் சாமான்கள் .... .... 57
22. பிரயாணத்திலிருந்து திரும்பி வந்தவுடன் ஓதும் துஆ 59
23. மௌலானா அவர்களின் உபதேசங்கள் .... 60

# முன்னுரை

முஸ்லிம் சமுதாயம் தன்னுடைய கடமையை மறந்து, அல்லாஹ்வின் பூரண அருளை அடையாத நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் இக்காலத்திலே டில்லி மௌலானா ஷாஹ் முஹம்மது இல்யாஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் காலப் போக்கின் முக்கியத்துவத்தையுணர்ந்து இஸ்லாமிய கூட்டுமுறைப் பிரசாரத்திற்குப் புத்துயிரளித்து சன்மார்க்க ஒளி நாடெங்கும்பரவி முஸ்லிம்சமுதாயத்தில் முன்னேற்றத்தை உண்டாக்கியிருப்பது கண்கூடு.

இந்த தப்லீக் இயக்கத்தின் தத்துவத்தையும் இப்பெரும் பணியில் ஈடுபடுவோர் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளையும் ஒட்டி மௌலானா அவர்கள் வகுத்த ஆறு திட்டங்களின் விரிவுரையை மௌலானா ஆஷிகெ இலாஹி அவர்கள் உர்தூவில் செய்துள்ளார்கள். தமிழகத்தின் நன்மையை உத்தேசித்து அவ்விரிவுரையை யான் தமிழில் மொழிபெயர்த்து இச்சிறுநூலின் மூலம் வெளியிட்டுள்ளேன். இத்திட்டங்களுக்கு ஆறு நம்பர்கள் என்று கூறப்படுவதால் தலையங்கங்களிலும் நம்பர் என்றே பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதில் பொதிந்துகிடக்கும் தத்துவங்களை நன்குணர்ந்து செயல்புரிய வல்ல ரஹ்மான் எனக்கும் ஏனைய முஸ்லிம்களுக்கும் நற்கிருபை செய்வானாக! இந்நூலை தமிழில் எழுதி வெளியிடும்படி எமக்கு உற்சாகமளித்த (திண்டுக்கல்) மத்திய தப்லீக் ஜமாத்துக்கு அல்லாஹ¬ தஆலா இரு உலக வாழ்வையும் தந்து. இவ்வழியில் ஊழியம் செய்யும் ஆற்றலையும் ஊக்கத்தையும் கொடுத்தருள்வானாக! ஆமீன்.

காதிம், ஷரபுத்தீன்,
திண்டுக்கல்.

வேலூர் மத்ரஸா பாக்கியாதுஸ்ஸாலிஹாத் முதர்ரிஸ்
உத்தமபாளையம் மௌலானா மௌலவீ
முஹம்மது அபூபக்ர் சாஹிப் அவர்களின்

# மதிப்புரை

இந்த ஆறு திட்டங்கள் (چه باتین) என்ற தமிழ் தர்ஜமாவை ஆரம்ப முதல் கடைசிவரை வாசித்துப்பார்த்தேன். தற்கால முஸ்லிம் ஆண், பெண், கற்றோர், கல்லாதார் எல்லோர்களுக்கும் முக்கியமான விஷயங்கள் இதில் அடங்கி யிருக்கின்றன. அழகிய முறையில் சுருக்கமாகவும், தெளிவாகவும், மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே நமது முஸ்லிம் சகோதர சகோதரிகள் தத்தம் ஆத்ம மோக்ஷத்திற்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் இந்நூலை வாசித்தறிந்து கிரியாம்சையின் மூலம் தங்களை உண்மை முஸ்லிம்களாக்கிக்கொள்ள முயற்சிப்பார்களாக! இந்நூலை உர்துவில் எழுதிய மவ்லானா ஆஷிகே இலாஹி சாஹிபவர்களுக்கும் சரியாக மொழி பெயர்த்த மவ்லானா மவ்லவீ ஹாஜி ஷரபுத்தீன் சாஹிபவர்களுக்கும் அல்லாஹு தஆலா நீடித்த சுக வாழ்வையும் இது போன்ற பல அரிய நூல்களை எழுதும் ஆற்றலையும் கொடுத்து இஸ்லாமிய உண்மை தொண்டர்களாக்குவானாக!

ஆமீன்!

مولوی محمد ابوبکر باقوی

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

الحمد لله رب العالمين ـ و العاقبة للمتقين
و الصلواة و السلام على سيدنا محمد رحمة
للعالمين وعلى اله وصحبه المهتدين

# ஆறு திட்டங்கள்

சென்ற பல நூற்றாண்டுகளாக உலக மக்களிடையே தீமையை யொழித்து நன்மையைப் பரப்பும் பழக்கம் முஸ்லிம்களைவிட்டு மாறி விட்டது. ஒரு சில நல்லடியார்கள் இக்காரியத்தைச் செய்து வந்தார்களாயினும் அது தனிப்பட்ட முறையில் நடைபெற்றதல்லாமல் கூட்டு (ஜமாஅத்) முறையில் நடைபெறவில்லை.

"மௌலானா முஹம்மது இல்யாஸ் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள்" டெல்லி நிஜாமுத்தீன் என்ற ஊரில் கூட்டுமுறை (ஜமாஅத்) பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். மார்க்கக்கல்வி நன்கு கற்றிருந்தும் இக்காரியத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குரிய வேலைத்திட்டமின்றி தவித்துக்கொண்டிருந்த உலமாக்களுக்கு நமது மௌலானா அவர்கள் வழிகாட்டி அதை நடத்தும்படி செய்தார்கள். அவர்கள் வகுத்த கூட்டுமுறை பிரசாரத் திட்டத்தின் சுருக்கம் பின் வருமாறு:—

சில நபர்கள் ஒன்று கூடி ஒரு கோஷ்டியாக சேர்ந்து பிரசாரம் செய்ய வெளியூர்களுக்குச் செல்ல வேண்டும். அவர்களிற் சிலர் மதபோதனை செய்யும் திறமையுள்ளவர்களாகவும் மற்றவர்கள் அதைக் கற்றுக் கொள்பவர்களாகவும் அமைந்திருக்க வேண்டும். இவர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒன்று கூடி மார்க்க விஷயங்களைப் பேசி ஒழுங்குபடுத்திக்கொண்டு (ஞாபகம் செய்து கொண்டும்) அதன்படி நடக்கவும் பழகிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அநுஷ்டானத்தில் கொணர்வதால் இவர்கள் ஊர் திரும்பிய பின்பும் மார்க்கத்திற்கு முரணான காரியங்களில் கவனத்தைச் செலுத்தாது சன்மார்க்க சட்டதிட்டங்கள்படி வாழ்க்கையை நடத்த முடியும் என்று இம்முறையை மௌலானா அவர்கள் ஏற்படுத்தினார்கள். மௌலானா முஹம்மத் இல்யாஸ் ரஹ் "தப்லீக்"கின் உயிர்நாடி எனக்கருதி ஏற்படுத்திய அடிப்படைத் திட்டத்தின் படி இப்பிரசார வேலையில் தியாகம் செய்வதால் மறு உலகம் (ஆகிறம்) பற்றிய கவலை, அல்லாஹ்வின்மீது பக்தி சிரத்தை, மௌத்துக்குப் பின் நம்முடைய நீண்ட கால வாழ்க்கை பற்றிய சிந்தனை போன்றசிறந்தபிரயோஜனங்கள் ஏற்படுகின்றன. இன்னும் இவ்வழியிற் செல்வதால் அதிகமாக அல்லாஹ்வை (திக்று) தியானம் செய்யவும் நமது தொழுகையைச் சிறந்த வணக்கமாக ஆக்கிக்கொள்ளவும் ஊர் திரும்பியதும் மார்க்கத்திற்கு முரணான விஷயங்களில் கவனத்தைச் செலுத்தாமல் சன்மார்க்க நல்லொழுக்கங்களை எடுத்து நடப்பதற்கான பக்குவத்தை பெற்றுக்கொள்ளவும் பிறருக்கு

கற்றுக்கொடுப்பது போன்ற காரியங்களில் அதிக ஆர்வமும், ஊக்கமும் உண்டாகின்றனவென்பதற்கு நமது அநுபவமே சிறந்த சாட்சியாக விளங்குகிறது. "தப்லீகின்" ஆறு திட்டங்களை ஆறு நம்பர் என்று மௌலானு அவர்கள் கூறுகிருர்கள். அவைகளாவன :—

1. கலிமா 2. தொழுகை 3. கல்வியும் தியானமும் 4. முஸ்லிமுக்கு மரியாதை செய்வது 5. நிய்யத் (எண்ணம்) பரிசுத்தம் 6. சன்மார்க்க வழியில் தொண்டு புரிய காலத்தை ஒதுக்குவது. இந்த ஆறு திட்டங்களும் "தப்லீகின்" உயிர்நாடியாகும்.

எக்காரியத்தைச் செய்தாலும் அதில் அவசியமில்லாததை விட்டுவிடுவது என்ற 7-வது திட்டம் இந்த ஆறு திட்டங்களிலும் முக்கியமான நிபந்தனையும் பேணுதலுமாகும். மனிதன் ஆண்டவனின் கட்டளைகட்கு அடிபணிந்து தன்னை அவனுடைய அடிமை என்று உணரும் பழக்கத்தை உண்டாக்குவது தான் இந்த ஆறு திட்டங்களின் கருத்தாகும்.

**கருத்துச் சுருக்கம் 1. கலிமா :** அல்லாஹ்வின் கட்டளைப்படி நடக்க ஆர்வமும், தன்னை அவனுடைய அடிமையென்று உணர்ந்து கொள்ளும் தன்மையை தனக்குள் உண்டாக்கிக்கொள்வதும் ஆகும்.

**2. தொழுகை :** இதன் மூலம் சன்மார்க்க கடமைகளின்படி நம்முடைய வாழ்நாள் முழுமையிலும், நடந்துகொள்ளும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வது.

3. இல்மு : இதன் மூலமாக அல்லாஹ்வின் கட்டளையை அறிந்து அமல் செய்வதின் பலாபலன் களையும் அமல் செய்யாதிருப்பதால் நேரிடும் சங்கடங் களையும் உணர்ந்து கொள்வது.

திக்ரு : தியானத்தால் அல்லாஹ்வின் மகத்துவத் தையும், பெருமையையும் மனத்தில் நிலை நாட்டுவது.

இக்ராமுல் முஸ்லிம் : முஸ்லிம்களுக்கு மரியாதை செய்வதும் மனிதர்களுடன் கலந்து உறவாடுவதில் மேற்கொள்ளும் ஒழுக்க முறைகளை கவனத்தில் கொண்டு நடப்பதுமாகும்.

இக்லாஸுந் நிய்யத் : தூய எண்ணம், எல்லாச் செயல்களையும் அல்லாஹ்வின் திருவுளப் பொருத் தத்தை நாடியே செய்வதும், நாம் செய்யும் ஒவ்வொரு அமலிலும் ஆகிறத்தை (மறுமையை) யே குறிக் கோளாகக் கொள்வதுமாகும்.

காலத்தை ஒதுக்கி வைப்பது: ( தப்ரீஹே அவ்காத் ) நம் வீட்டிலும், வியாபார ஸ்தலங்களிலும் இருந்து கொண்டு மேற்கூறப்பட்ட விஷயங்களில் கவனம் செலுத்தி நம் வாழ்வை திருத்திக் கொள்வது மிகவும் சிரமம் என்பதை நாம் அனுபவ வாயிலாக அறிந் திருக்கிறோம். ஆகையால் இக்காரியங்களில் பயிற்சி அடைவதற்காக நம்முடைய வாழ்நாளில் ஒரு குறிப் பிட்ட காலத்தை ஒதுக்கி வைப்பதாகும்.

கருத்து : தன்னுடைய காரியாதிகள், வியாபாரம் தனக்குப் பிரியமான வஸ்துக்கள், தன்னுடைய சுகம் முதலியவற்றைத் தியாகஞ் செய்து, துறந்து,

கூட்டமாகச் சேர்ந்து வெளியூர் சென்று, இத்திட்டங்களைத் தானும் அனுஷ்டித்து பிறரையும் அனுஷ்டிக்கச் செய்வது தப்லீக் உடைய திட்டங்களில் ஆறுவது திட்டமாகும்.

மேலும் இவ்வாறு ஒதுக்கப்பட்ட காலத்தில் அவசியமில்லாத காரியங்களில் ஈடுபடுவதிலிருந்து விலகி யிருப்பது மிகமிக முக்கியமாகும். இது, மேற் கூறப்பட்ட ஆறு திட்டங்களுக்கும் ஒரு நிபந்தனை போன்ற 7வது திட்டமாகும்.

இப் புத்தகம் தப்லீகுக்காக வெளியில் செல்பவர்களுக்கு விஷயங்கள் புரிந்து கொள்வதற்கும் பிறருக்கு எடுத்துரைப்பதற்கும் பெரிதும் உதவியளிக்கும். இங்கு ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. அதாவது தப்லீக் வேலையைச் செய்ய வெளியில் செல்லாமல் உள்ளூரிலிருந்து கொண்டு இப்புத்தகத்தைப் படிப்பதால்மட்டும் இவ்வேலையின் நுட்பம் விளங்காது. ஆதலால் பிரசார வேலையில் ஈடுபட்டு ஜமாஅத்துடன் வெளியில் செல்லும்பொழுது இதைப்படித்து நினைவிற் கொண்டு பிறருக்கும் போதிப்பதையே முழுநோக்கமாகக்கொண்டு இப் புத்தகத்தை எழுதியுள்ளோம்.

## ஆறு நம்பர்கள்

### முதலாவது நம்பர்.

(كَلِمَةُ طَيِّبَةٍ) لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

1. **லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி.**

இது அடிமையின் சார்பாக அல்லாஹ்றவின் பால் விண்ணப்பம் செய்வது. அதாவது மனிதன் தன்னை அல்லாஹ்றவின் அடிமையென்றும் அவன் உத்திரவுக்கு கீழ்ப்படிவதென்றும் (விலக்கல்களை விட்டு நீங்கிக் கொள்வதென்றும்) அல்லாஹ்றவிணிடம் ஒப்பந்தம் செய்து கொள்வதாகும்.

இந்த கலிமாவில் கவனிக்க வேண்டியவை நான்கு விஷயங்களாகும்:

1. கலிமா வாசகத்தை திருத்தமாக உச்சரிப்பது.
2. அதன் பொருளை விளங்கிக்கொள்வது.
3. கருத்தை உணர்வது.
4. கலிமாவிலிருந்து ஏற்படும் கடமைகளைத் தெரிந்து செயலாற்றுவது.

**வாசகம்:** இந்த கலிமாவின் வாசகத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. முதலாவது,

**லாஇலாஹ இல்லல்லாஹு** لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ

**பொருள்:** வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்றவைத் தவிர வேறு யாரும் இல்லை. முஹம்மது நபி ஸல் அவர்கள் அல்லாஹ்றவுடைய திருத்தூதர்.

**கருத்து:** அல்லாஹ்றவையே வணங்குவது; அவனால் அறிவிக்கப்பட்ட வணக்கங்களான தொழுகை, நோன்பு, ஜகாத்து, ஹஜ்ஜு ஆகியவற்றில் அவனோடு வேறு எதையும் இணைவைக்காதிருப்பது; அல்லாஹ்றவே நமது நாட்டத்தை பூர்த்தி செய்பவன்;

சங்கடங்களை நீக்கி வைப்பவன்; லாப நஷ்டத்தைக் கொடுப்பவன்; எங்கும் இருப்பவன்; நம்முடைய ஒவ்வொரு வார்த்தையையும் கேட்கிறவன் என்று நம்பிக்கை வைப்பதும் அவன் காட்டிய வழிகள் யாவும் உண்மையானவை; அவனுடைய கட்டளைகள் அமல் நடத்தப்பட வேண்டியவை என்பதை உணர்வதும் நமது பழக்க வழக்கம் இவ்வுலகச் சட்டதிட்டம் முதலியவை அவன் கட்டளைக்கு மாறாக இருப்பின் அவை உண்மைக்கு விரோதமென உறுதிகொள்வதும் ஒவ்வொரு வேலையிலும் முதன்மையாக அல்லாஹ்வின் கட்டளையைத் தெரிந்து பின்னர் அதை அமல் நடத்துவதும் அவனுடைய கிருபையையே ஆதரவு வைப்பதும், அவனுடைய கோபத்தைவிட்டும் தப்பித்து அவன்மீது பரிபூரண நம்பிக்கை வைப்பதுமே லாயிலாஹ இல்லல்லாஹு வின் கருத்தாகும்.

இரண்டாவது பகுதி

## முஹம்மதுர் مُحَمَّدٌ رَسُولُ اللهِ றசூலுல்லாஹி

**கருத்து:** லா இலாஹ இல்லல்லாஹு என்று விண்ணப்பம் செய்வதின் கருத்து, அல்லாஹ்வின் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்பதாகும். அவன் உத்திரவுகளை நாமாகவே தெரிந்து கொள்ள முடியாது. நபிகள் நாயகம் ஸல் அவர்கள் மூலமாகத்தான் உத்திரவுகள் அடியார்களுக்கு எத்துகின்றன. எனவே நாயகம் ஸல் அவர்கள் காட்டிய முறைப்படியே அல்லாஹ்வை வணங்க

வேண்டும். அவர்கள் அல்லாஹ்வுடைய அடியாரும் தூதரும் ஆவர். அவர்கள் சுயேச்சையாக எதுவும் சொல்லவில்லை. அவர்களுக்குக் கீழ்ப்படிவதும் அவர்களை நேசிப்பதும் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவதும், அவனை நேசிப்பதுமாகும். அவர்களுடைய சொல்லை ஒப்புக்கொள்வதும் அவர்களுடைய உத்திரவுக்கு ஏன், எதற்காக என்று வினவாமல் வழிபடுவதும் கடமையாகும். நமக்குத் தெரியாத (அறிவிற்கு எட்டாத) விஷயங்களை அவர்கள் கூறியிருப்பின் அவற்றின் மீது ஈமான் (நம்பிக்கை) கொள்வதும் கடமையாகும்.

உதாரணமாக, மலக்குகள் (வானவர்கள்) தக்தீர் (விதி) சுவர்க்கம், நரகம், கப்ருடைய சம்பவங்கள் இறுதிநாளின் நிகழ்ச்சிகள் இன்னும் நம் அறிவுக்கு எட்டாத பல விஷயங்களை அவர்கள் சொன்னபடியே ஒப்புக்கொள்வதும், அவர்கள் எவ்வழியில் தங்களது வாழ்வை நடாத்திக் காண்பித்தார்களோ அவ்வழியில் நாமும் நடப்பதும்தான் நேர்மையும் அல்லாஹ்வின் திருவுள்ளத்திற்கு உகந்ததுமாகும். அதற்கு மாருக நடப்பது அல்லாஹ்வுடைய திருவுளப் பொருத்தத்திற்கு விரோதமாகும் என்பதை திட்டமாக நம்புவதும் தான் இதன் கருத்து.

## கலிமாவின் கடமைகள்.

கலிமாவின் கருத்தை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்ட மனிதன் மூமின் ஆகிவிடுகிருன். பின்பு அநேக காரியங்களை செய்வதும் அநேக காரியங்களை விடுவதும் அவன் மீது கடமையாகி விடுகிறது.

ஹதீது: கலிமா ஓதுபவர்களை தீய செயல்களைச் செய்வதினின்றும் அக் கலிமா தடுத்துவிடுகிறது. ஆதலால் கலிமா ஓதுகிறவர்கள் ஒவ்வொரு சமயத்திலும் அல்லாஹ்வுடைய கட்டளைகளை நினைவில் வைத்து நடப்பது அவசியம். பிறப்பதும் இறப்பதும், உண்பதும் பருகுவதும், உறக்கமும் விழிப்பும், வணிகமும் விவசாயமும், கொடுப்பதும் வாங்குவதும் இன்னும் பலவும் செய்வதில் மார்க்க விதியைத் தெரிந்து அனுமதி யளிக்கப்பட்டவைகளை மேற்கொள்ளவும் மறுக்கப்பட்டவைகளைத் தவிர்க்கவும் வேண்டும்.

## கலிமாவின் சிறப்பு

ஹதீது 1.: திக்ரு (தியானங்) களில் சிறந்தது லா இலாஹ இல்லல்லாஹ⁻ என்று சொல்வதாகும்.

ஹதீது 2: லா இலாஹ இல்லல்லாஹ⁻வை நூறு தடவை ஓதுங்கள். அது எல்லாப் பாவங்களையும் அழித்துவிடும். அதுவே எல்லா அமல்களிலும் மேலானது.

ஹதீது 3: யாராயினும் லா இலாஹ இல்லல்லாஹ⁻வை காலையிலும் மாலையிலும் நூறு தடவை ஓதினல் அவர் நபி இஸ்மாயீல் அலை வுடைய சந்ததியிலுள்ள 10 அடிமைகளுக்கு உரிமை யளித்த பெரும் பலன் கிடைக்கிறது.

ஹதீது 4: நீங்கள் லா இலாஹ இல்லல்லாஹ⁻வை கூறி உங்களுடைய ஈமானை புதிப்பித்துக் கொள்ளுங்கள்.

மேற்கண்ட நான்கு ஹதீதுகளும் கலிமாவின் சிறப்பை யெடுத்துக் காட்டுபவைகளாகும்.

## 2-வது நம்பர்.

## தொழுகை نماز

கலிமாவிற்குப் பின் அல்லாஹ்வுடைய உத்திரவுக்குக் கீழ்ப்படிவது, அடியார்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாகும். அதில் முதலாவது தொழுகை. عاقل சுவாதீனமுள்ள بالغ வயதுவந்த ஆண் பெண் அனைவர் மீதும் கடமையாகும். தொழுகையை கவனமாய் நடத்தி வருகிறவர்கள் கலிமாவில் தாங்கள் செய்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுகிறவர்களாவர்; அதில் கவனம் செலுத்தாதவர்கள் அவ்வொப்பந்தத்தை அலட்சியம் செய்து மீறி நடப்பவர்களாவர்.

இதனால் தான் தொழுகையை விடுகிறவன் இஸ்லாமுக்கு புறம்பான காரியத்தை செய்துவிட்டானென்றும் கியாம நாளில் காரூன், பிர்அவுன், ஹாமானுடன் இருப்பான் என்றும் நபிகள் நாயகம் ஸல் அருளிச்செய்து இருக்கிறார்கள்.

கலிமாவிற்குப் பின் அமல்களில் சிறந்தது தொழுகை. கியாம நாளில் முதல் கேள்வி தொழுகையைப் பற்றியது. தொழுகை நல்ல முறையில் இருந்தால் எல்லாவிதமான சந்தோஷமும் நிஃமத்தும் (பாக்கியமும்) உண்டு. இல்லையானால் எவ்வித பாக்கியத்தையும் அடைய முடியாது. ஆகவே தொழுகையை நல்ல முறையில் குறிக்கப்பட்ட நேரங்களில் தவறாமல் நிறைவேற்றுவது மிகவும் அவசியம். தொழுகையில் ஓத வேண்டிய அல்ஹம்து

தன, அத்தஹிய்யார்த்து, குனூத் முதலியவற்றை மனனஞ் செய்தும், சட்டதிட்டங்களைத் தெரிந்து ஓர்மையுடன் நாளுக்கு நாள் தொழுகையை சிறந்த முறையில் ஆக்கி, மனேநிலையை பக்குவம் அடையச் செய்வதும் நமது கடமை. தொழுகிறவனின் தலை, கண், மூக்கு, நாவு, உதடு, இடுப்பு, கை, கால், சரீரம் முழுவதும் அல்லாஹ்வுடைய வணக்கத்தில் ஈடுபட்டு அதிலேயே பழகிவிடுகின்றன. யாராயினும் ஒருவர் முறைப்படி தொழுவாராயின், தொழுகைக்கு வெளியிலும் அவருடைய சரீரத்தின் எப்பாகத்திலிருந்தும் பாவச் செயல் ஏற்படாது. நிச்சயமாக தொழுகை மனிதனை வெட்கக்கேடான காரியங்களினின்றும், தீயவைகளினின்றும் தடுக்கிறதென்று குர்ஆன் ஷரீபில் வந்திருக்கிறது.

குர்ஆன் ஷரீபில் தொழுகையைப்பற்றி நூற்றுக்கணக்கான இடங்களில் கூறப்பட்டிருப்பதுடன் அநேக இடங்களில் திருத்தமாக தொழும்படி வலியுறுத்தப்பட்டும் இருக்கிறது. ஒரு தொழுகைக்குப் பின் நிகழ்ந்த (சிறு) பாவம் மறு தொழுகையினல் மன்னிக்கப்படுகிறது என்றும் ஒருவன் தன் வீட்டின் வாயிற்படியிலுள்ள ஆற்றில் ஐந்து முறை குளித்தால் அவன் உடம்பிலுள்ள அழுக்கு நீங்கி விடுவதுபோல் தினமும் ஐந்து வேளை தொழுவதால் அவனைச் சார்ந்திருக்கும பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடுகின்றனவென்று நமது நபிகள் நாயகம் ஸல் அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் உங்கள் குழந்தைகள் 7 வயது எய்தியவுடன் அவர்களை தொழும்படி சொல்லுங்கள். 10 வயது அடைந்தால் அவர்களை அடித்துத் தொழும்படி ஏவுங்கள்.

## இமாம் ஜமாஅத்.

ஜமாஅத்துடன் சேர்ந்துதொழுவது தனியாய்த் தொழுவதை விட 27 பங்கு விசேஷமானது.

ரிவாயத்: வீட்டிலிருந்துகொண்டு இமாம் ஜமாஅத்துக்கு வராமல் இருப்பவர்களுடைய வீட்டைக் கொழுத்திவிட நபிகள் நாயகம்ஸல் நாடினார்கள்; ஆனால் குழந்தைகளையும் பெண்களையும் உத்தேசித்து அவ்வாறு செய்யாதிருந்துவிட்டார்கள்.

ரிவாயத்: "நபிகள் நாயகம்ஸல் அவர்கள் காலத்தில் நயவஞ்சகர் (முனாபிக்கு) களைத் தவிர வேறு யாருக்கும் ஜமாஅத்தை விடுவதற்கு மனம் துணியவில்லை" என்று இப்னு மஸ்ஊத்ரலி அவர்கள் கூறி இருக்கிறார்கள். இஷா தொழுகையை இமாமுடன் தொழுவதால் இரவின் முற்பகுதி முழுவதும் வணங்கிய பலனும், பஜ்ர் தொழுகையை இமாமுடன் தொழுவதால் இரவின் பிற்பகுதி முழுவதும் வணங்கிய பலனும் கிடைக்குமென்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

## ருகூஉ, சுஜூது.

ஹதீது: திருட்டில் மிகக் கடுமையானது தொழுகையில் திருடுவதாகும் என்று நபிகள் நாயகம் சொன்னார்கள். தொழுகையில் திருடுவது எவ்வாறு என்று சஹாபாக்கள் வினவினர். ருகூஉ, சஜ்தாவை சரிவரச் செய்யாமல் அரை குறையாகச் செய்வது தொழுகையில் திருடுவதாகுமென நபிகள் நாயகம் விடையளித்தார்கள். ஆகவே கவனித்து முறைப்படி தொழுவது அவசியம்.

நேரம் தவறித் தொழுவது: தொழுகையை குறித்த நேரங்களில் நிறைவேற்ற வேண்டும். சூரிய உதயம், உச்சி, அஸ்தமனத்தில் தொழுவது கூடாது. சூரியன் மாலை நேரத்தில் மஞ்சள் வர்ணம் அடையும் வரை எதிர்பார்த்து அந்நிறம் வந்த பின் அவசரம் அவசரமாக குனிந்து, நிமிர்ந்து தொழுவது முனாபிக் (நயவஞ்சகர்) களுடைய தொழுகையாகும்.

## மூன்றுவது நம்பர்.

## علم و ذكر

### கல்வியும், தியானமும்.

1. கல்வி, 2. தியானம் (திக்ர்) இவ்விரண்டு விஷயங்களின் மேன்மையைப்பற்றி நூற்றுக்கணக்கான ஹதீதுகள் வந்திருக்கின்றன.

ஹதீது: நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். இவ்வுலகமும் அதிலுள்ளவைகளும் சபிக்கப்பட்டவை. (ஆனல் அல்லாஹ்வுடைய திக்ரும் (தியானமும்) அவனுக்குப் பிரியமான காரியங்களும் மார்க்கத்தைக் கற்றறிந்த உலமாக்களையும் தவிர) ஆகவே ஒவ்வொரு முஸ்லிமும் இல்மு, திக்ருடைய உயர்நிலையை அடைய முயற்சிப்பது அவசியம்.

இல்மு: (கல்வி) அடிமையை ஆண்டவன் அளவில் சேர்த்து வைப்பதும் அவனுடைய கட்டளைப் படி நடாத்தி வைப்பதுமான இல்முதான் அல்லாஹ்வுக்கு பிரியமானது. மார்க்கத்தைத் தெரிந்து கொள்ளுமளவு இல்மை கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவரது கடமையாகும்.

எப்பொழுது மனிதன் தன்னை அல்லாஹ்வின் அடிமையென்று உறுதி கூறி அவன் கட்டளைக் கிணங்க நடப்பதற்கு எண்ணம் கொள்வானே, அப்பொழுதே அவன் ஆண்டவனின் உத்திரவுகளை தெரிந்து கொள்வதும் வணங்கும் முறைகளை பழகிக் கொள்வதும் கடமையாகி விடுகிறது. தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ்ஜு, மனிதர்களுடன் கலந்து உறவாடும் ஒழுக்க முறை, உண்பது, உறங்குவது, விழிப்பது முதலியவற்றின் முறைகளையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

எக்காரியங்களைச் செய்யாமல் விடுவதால் பெருங் குற்றம் நேரிடுமோ, குறைந்தபக்ஷம் அவைகளை யாவது தெரிந்து, அவற்றைச் செய்து முடிப்பது கடமையாகும். ஏனென்றால் சன்மார்க்கத்தைத் தெரிந்து, அதனால் பயன் அடையாதவன் கியாம நாளில் கடுந் தண்டனைக்குள்ளாவான் என நபிகள் நாயகம் ஸல் கூறியுள்ளார்கள். ஆதலால் மேற் கூறப்பட்ட அளவு மார்க்கக் கல்வி பெறுவது மிகவும் அவசியம்.

**உலமாக்களும், தாலிபுல் இல்முகளும்.**

ஹதீது 1: எவரேனும் ஒருவர் பிறருக்கு நல்வழி காட்டினால் அவ்வழியில் செயல் புரிபவருக்கு கிடைக்கும் பலன் வழிகாட்டியவருக்கும் கிடைக்கிறது.

ஹதீது 2: (இல்மு இல்லாத) ஆயிரம் வணக்கக் காரர்களைவிட விவேகமுள்ள ஒரு (ஆலிம்) அறிஞன் ஷைத்தானுக்கு அதிகம் இடையூறாக இருக்கிறார்.

ஹதீது 3: ஒருவன் இஸ்லாத்தை உயிர்ப்பிக்கும் நோக்கத்துடன் கலாஞானம் பெறும் பொழுது மரணம் அடைந்துவிடுவானாயின் சுவர்க்கத்தில் அவனுக்கும் நபிகளுக்கும் இடையில் சிறிது வித்தியாசமே இருக்கும்.

ஹதீது 4: குர்ஆனைக் கற்று, பிறருக்கும் அதனை கற்றுக் கொடுப்பவனே உங்களுள் மேன்மையானவன்.

ஹதீது 5: எனது வார்த்தைகளைக் கேட்டு அவற்றை நன்றாக நினைவில் நிறுத்தி மற்றவருக்கும் போதிக்கும் அடியானுக்கு அல்லாஹு தஆலா க்ஷேமத்தை யளிப்பானாக.

ஹதீது 6: கல்வியறிவு பெறுவதற்காக ஊரை விட்டு, வெளியே செல்பவன் திரும்பி வரும்வரை அல்லாஹ்வுடைய வழியில் இருக்கிறான்.

ஹதீது 7: ஒரு சமயம் நபிகள் நாயகம் ஸல் அவர்கள் ஸஹாபாக்களை நோக்கி, எனக்குப் பின் நிச்சயமாக ஜனங்கள் உங்களைப் பின்பற்றுவார்கள். தூரமான இடங்களிலிருந்து சன்மார்க்கத்தைப் புரிந்து கொள்ள உங்களிடம் வருவார்கள். அச்சமயம் நற்குணத்துடன் நீங்கள் அவர்களோடு உறவாடுங்கள். அவர்களுடைய க்ஷேமத்தை விசாரித்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய கூட்டங்களில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

ஹதீது 8: சில ஜனங்கள் அல்லாஹ்வுடைய வீடுகளில் (மஸ்ஜிதுகளில்) ஏதாவது ஒன்றில் கூடி அவனுடைய வேதத்தை ஓதி ஒருவர் மற்றவருக்குச் சொல்வாரானால் அவர்கள் மீது அல்லாஹ்வின் கருணையும், சாந்தியும் உண்டாகிறது. மலக்குகள் அவர்களைச் சூழ்ந்துகொள்ளுகிறார்கள். அல்லாஹுதஆலா மலக்குகளிடத்தில் அவர்களைப் போற்றிப் பேசுகிறான்.

## மூன்றாம் நம்பரின் இரண்டாம் பகுதி.

திக்ர்: சதா ஆண்டவனைத் தியானிப்பது முதன்மையான திக்ர் ஆகும். மனதை அல்லாஹ்வுடைய நினைவில் பிணைத்து வைப்பதும், நாவை அவனுடைய ஞாபகத்திலேயே நடத்திவைப்பதும், இந்த நற்பதவியடையக் காரணமாய் இருக்கிறது. திக்ருடைய பிரயோஜனத்தையும் அதன் பலாபலன்களையும் தெரிந்த அடியார்கள் தங்கள் வாழ்நாளில் சிறிது காலங்கூட வீணாகக் கழிக்கமாட்டார்கள். எல்லா சந்தர்ப்பங்களிலும் உங்களுடைய நாக்கு அல்லாஹ்வுடைய ஞாபகத்தில் நனைந்ததாக இருக்கட்டும் என்று நாயகம் ஸல் அவர்கள் சஹாபாக்களுக்கு உபதேசித்தார்கள். பக்தி நிறைந்த அடியார்கள் அல்லாஹ்வை அதிகமாக நினைத்து அவன் நமக்குச்செய்துள்ள உபகாரங்களையும் அவனுடைய தத்துவச் சின்னங்களையும் ஆராய்ந்து அவனுடைய பெருமையையும் மகத்துவத்தையும் மனத்தில் உருவாக்கிக் கொள்வதவசியம். திக்ரு அதிகரிக்கும்போது அல்லாஹ்வின் மேலுள்ள அன்பு பலமடைகிறது. நற்செயல்களில் பிரகாசம் ஏற்படுகிறது.

கற்ற கல்விக்கு உயிர் உண்டாகிறது. பக்தி அதிகரிக்கிறது. ஒவ்வொரு செயலிலும் தன்னை அல்லாஹ்வின் அடிமை என்று காட்டக்கூடிய நிலை ஏற்பட்டு வணக்கத்தின் தரம் உயர்கிறது. ஆதலால் திக்ரை அதிகமாய் பழக்கத்தில் கொண்டுவர வேண்டும். குறிப்பாக பிரசாரத்திற்கு வெளிச் செல்லும் காலத்தில் ஒரு க்ஷணமேனும் அல்லாஹ்வை மறந்திருக்கக் கூடாது.

ஹதீது ஷரீபில் கூறியுள்ளபடி உறங்கும் போதும் விழிக்கும் போதும், உண்ணும் போதும், உண்டு முடிந்த பின்னும் வீட்டினுள் நுழையும் போதும், வெளியிற் செல்லும் போதும், பிரயாணம் செய்யும் போதும், வாகனத்தில் ஏறும் போதும், புதிய ஊரில் நுழையும் போதும், மற்ற சந்தர்ப்பங்களிலும் ஓதக்கூடிய துஆக்களை மனனம் செய்து அவ்வப்போது ஓதும் பழக்கத்தை நம்மில் உண்டாக்கிக் கொள்ளுவோமானால், சதா அல்லாஹ்வை ஞாபகத்தில் வைப்பதற்கான பழக்கம் உண்டாகி விடுகிறது.

குறைந்த பக்ஷம் எல்லோருமே காலையிலும் மாலையிலும் மூன்ரும் கலிமா, இஸ்திஃபார், சலவாத்து, குர்ஆன் ஷரீப் ஓதுதல் முதலிய காரியங்களுக்கு அவகாசமான நேரத்தை ஒதுக்கி ஓதிவர வேண்டும். இவ்வாறு செய்வதால் இவ்வுலக காரியங்களுக்கு சில சந்தர்ப்பங்களில் இடையூறு ஏற்பட்டாலும், ஆகிரத்தில் எண்ணற்ற பாக்கியங்களும் ஏராளமான வெகுமதிகளும் பெறுவதற்கு இது சிறந்த வழியாகும்.

திக்ரின் சிறப்பு. ஹதீது : (1) திக்ரு செய்வதினால் இருதயம் சுத்தி அடைகின்றது. (2) அல்லாஹ்வுடைய வேதனையை விட்டும் காப்பாற்றக் கூடிய நற்செயல்களில் திக்ருக்குச் சமமானது வேறெதுவுமில்லை. (3) அல்லாஹ்வை மறந்திருக்கும் ஜனங்களிடையே திக்ரு செய்கிறவன், இருளடைந்த வீட்டிற்கு விளக்கேற்றுவோனைப் போலாவான். (4) மனிதர் அல்லாஹ்வை திக்ரு செய்தால் அல்லாஹுதஆலா அவர்களை மேலுலகில் நினைக்கிறான். (5) ஒருவன் மடியில் பணத்தைக் கட்டிக் கொண்டு அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்கிறான். மற்றொருவன் அல்லாஹ்வை திக்ரு செய்துகொண்டிருக்கிறான். இவ்விருவருள் திக்ரு செய்பவனே சிறந்தவனாவான்.

## நான்காம் நம்பர்.

اکرام مسلم

**இக்ராமே முஸ்லிம்** (முஸ்லிமை கண்ணியப்படுத்துவது).

இந்த நான்காவது திட்டத்தின் கருத்தாவது :- அடியார்களின் கடமைகளைக் கவனித்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவைகளை நிறைவேற்றத் தன்னைப் பழகிக்கொள்வதும் ஒவ்வொருவரிடத்திலும் அவரவர் தரத்திற்குத் தக்கவாறு நடந்துகொள்வதும் (முஸ்லிமுடைய உள்ளத்தில் ஈமானுடைய பிரகாசம் குடிகொண்டிருப்பதால்) அவனை கண்ணியப் படுத்தி மதித்துநடத்துவதும் முக்கியமாகும். யார் நமது பெரியவர்களின் பால் மரியாதையும், சிறியவர்கள்மீது கிருபையும்,மார்க்கக்கல்வி பயின்ற

உலமாக்களுக்கு கண்ணியமும் வைக்கவில்லையோ அவன் நம்மைச் சேர்ந்தவன் அல்லன் என்று நபிகள் நாயகம் ஸல் கூறியுள்ளார்கள். ஆகவே முஃமின் (பக்தன்) சிருஷ்டிகளின் கடமைகளை யுணர்ந்து அவைகளை நிறைவேற்றி எல்லோரிடத்திலும் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். தனக்கு விருப்பமானதை பிறருக்கும் விரும்ப வேண்டும். எவர் மீதும் கோபமோ பொறாமையோ மனத்தில் கொள்ளக்கூடாது. தன்னைப் பெரிதாக நினைக்கும் எண்ணம் தன் மனத்தில் இடம்பெறவிடலாகாது. யாரையும் தாழ்வாகக் கருதுவதுங் கூடாது. எல்லோருடனும் அன்பாக நடக்கவேண்டும்.

ஒரு முஸ்லிமை சந்திக்கும்போது நாமே முதலில் சலாம் சொல்லுவதற்குப் பிரியப்படவேண்டும். யாரும் நமக்குச் சங்கடம் விளைவித்தால் அவர் மீது வருத்தப்படாமல் மன்னித்துவிட வேண்டும். நோயாளிகளிடம் சென்று அவர்களுடைய சௌகரியத்தை வினவவேண்டும். பிறருடைய கண்ணியத்தைக் காப்பாற்றுவதே தன்னுடைய கண்ணியமெனக் கருதுவதும், புறம்பேசாமல் இருப்பதும் பிறரிடம் குறை கண்டால் அக்குறையை மறைப்பதும் அவசியம். ஏதேனும் ஒரு காரியத்தில் யாராவது ஒருவர் ஆலோசனை கேட்டு நம்மிடம் வந்தால் அவருக்கு நேர்மையான அபிப்பிராயம் கொடுப்பதும் சந்தர்ப்பத்தை யொட்டி அக்காரியத்திற்குப் பொருளுதவி அவசியமானால் அதைச் செய்வதும் பிறருக்கு ஏற்படும் கஷ்டங்களில் பங்கெடுத்துக் கொள்வதும் முக்கியம். மற்றவர் மனத்தில்

அல்லாஹு த ஆலாவுடைய மகத்துவத்தையும் ஆகிரத்துடைய கவலையையும் உண்டாக்கி அவர்களை நரகத்தை விட்டும் காப்பாற்ற முயற்சிப்பதுதான் எல்லா சேவைகளிலும் மிகச் சிறந்தது. எல்லா முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து வாழும்படி இஸ்லாம் கற்பிக்கிறது. ஒவ்வொருவரும் பிறருடைய வசதிகளைக் கவனித்து நடக்கவேண்டும். இருவர் பேசிக்கொண்டிருக்கும் இடத்தில் அவர்களுடைய அனுமதியின்றி உட்காருவதும், ஒருவர் உட்கார்ந்திருக்கும் இடத்தில் நாம் உட்கார்ந்து கொள்வதும், ஜனங்கள் அணிவகுத்திருக்கும் போது அவர்களைத் தாண்டிக் கொண்டு அப்பால் செல்வது போன்ற பல காரியங்களைச் செய்வதும் இஸ்லாம் தடுக்கின்றது.

## முஸ்லிம் என்பவன் யார்?

ஹதீது 1: தன்னுடைய நாவாலும், கைகளாலும் பிறருக்குத் தீங்கு விளைவிக்காத ஒருவனே முஸ்லிம்.

ஹதீது 2: தன் அடுத்த வீட்டாருக்கு அக்கிரமம் செய்து, அதனால் அவர்களை நிம்மதியோடு வாழ்க்கை நடத்த விடாத ஒருவன் சுவர்க்கத்தில் நுழையமாட்டான்.

மேற் கூறப்பட்ட ஹதீதுகளிலிருந்து ஜனங்களுடைய மனதில் நம்மைப் பற்றி நல்லெண்ணம் உண்டாக வேண்டும். நாம் சங்கடத்தை விளைவிப்பவர்கள் என்ற தப்பெண்ணத்தைப் பிறர் கொள்ளாத வகையில் நடந்துகொள்வது அவசியமாகுமென்பது தெளிவாகின்றது. திக்கற்றவர்களுக்கு

உதவி செய்பவனுக்கு 73 நன்மைகள் எழுதப்படுகின்றன. அதில் ஒரு நன்மையின் பலனால் இவ்வுலகத்தில் சகல காரியங்களையும் சுமுகமான முறையில் அவர் சாதித்துக்கொள்ள முடியும். மீதி 72 நன்மையும் கியாம நாளில் இவனுடைய பதவி உயர்வதற்கு உபகாரமாயிருக்கும். ஒருவன் மற்றொரு முஸ்லிம் சகோதரனின் க்ஷேமத்தைத் தெரிந்து கொள்ள விரும்பி அவனிடம் செல்லும்போது எழுபதினாயிரம் மலக்குகள் அவனை வழியனுப்புகிறார்கள் என்று நமது நபிகள் நாயகம் ஸல் அவர்கள் கூறியுள்ளார்கள்

## ஐந்தாவது நம்பர்.

## اخلاص النية

### எண்ணத்தைப் பரிசுத்தப்படுத்துவது.

கருத்து: ஒவ்வொரு செயல்புரியும்போதும் அதில் ஆண்டவன் கட்டளைப்படி நடந்து அவனைப் பொருத்தமாக்கி வைப்பதே நோக்கமாகக்கொள்ள வேண்டும். இவ்வுலக சுகத்தை எதிர்பாராது மறுவுலக வாழ்க்கையில் சுகமாக இருப்பதற்காகவே அக் காரியத்தைச் செய்வதாக எண்ணும் பழக்கம் ஒருவனுக்கு உண்டாகிவிட்டால் அவன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் மறுமையில் பிரதிப் பிரயோஜனம் கிடைக்குமென்ற நம்பிக்கை அவனுடைய மனதில் வேரூன்றிவிடும். இதனால் அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய ரசூலும் வாக்களித்துள்ளபடி நாம் செய்யும் நற்செயல்களுக்குத் தகுந்த பலன் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் ஒவ்வொரு காரியத்தையும் செய்யும் பழக்கம் வந்துவிடும்.

ஹதீது: அமல்களின் பலன் நிய்யத்தைப் பொருத்திருக்கிறது. ஒரு மனிதன் எதை நிய்யத் செய்கிருனே அதையே அடைகிருன்.

கருத்து: பரிசுத்த எண்ணத்துடன் அல்லாஹுத ஆலாவுக்காகவே ஒரு காரியம் செய்யப்படுமாஞல் அதன் கூலி அல்லாஹ்விடத்தில் கிடைக்கும். எண்ணம் பரிசுத்தமின்றி மனே இச்சைக்காகவோ பிறரைச் சந்தோஷப் படுத்துவதற்காகவோ அல்லது சுயநலத்தைக் கருதியோ செய்யப்பட்டால் அக் காரியம் உயிரற்றதும் ஆண்டவனிடத்தில் லாபமடைய முடியாததுமாகி விடுகின்றது. அல்லாஹ்வுக் கென்றே செய்யப்படும் காரியத்திற்கு இக்லாஸ் என்று பெயர். அடியான் அல்லாஹ்வுக் கென்று ஒரு காரியத்தைச் செய்ய நாடிஞல் அவனுடைய அவ்வெண்ணத்தை அகற்றிவிட அவனது நப்ஸும் ஷைத்தானும் முயற்சி செய்கின்றனர். ஆகவே சுயநலம், புகழ், நற்பெயர் இவைகள் அழியக்கூடியவை என்றும் மறுவுலக நிஃமத்துகள் அழியாப் பொருளென்றும் பரிபூரண நம்பிக்கையை மனதில் உண்டாக்கிக் கொள்வதன் மூலம் எண்ணம் பரிசுத்தமடைகிறது. இந்நிலையை அடைந்தவர்கள் உண்பது, பருகுவது, உறங்குவது, விழிப்பது போன்ற உலக சாதாரண காரியங்களிலும் அல்லாஹ்வுக் கென்றே எண்ணி அதன் பலனை அடைந்துகொள்கிருர்கள். மேற் சொன்ன பரிசுத்த எண்ணத்தை சதா மனத்தில் குடிகொள்ளச் செய்வதற்கு பெரியோர்களின் சகவாசம் அவசியம்.

குறிப்பு: ஒரு நோன்பாளி நோன்பு வைப்பதில் நன்மையும் கிடைக்கும் உடல் நலமும் விருத்தியாகும் என்று நினைப்பதும், ஒரு ஹாஜி ஹஜ்ஜுக்குப் போவதில் நன்மையும் ஏற்படுகிறது; நாடுகளைச் சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பமும் கிடைக்கும்; எதிரிகளுடைய தொந்தரவை விட்டும் தப்பித்துக்கொள்ளவும் முடியும் என்று நினைப்பதும், ஒரு கொடையாளி ஏழைக்கு ஏதேனும் கொடுக்கும் போது நன்மையும் கிடைக்கும் ஏழையின் தொந்தரவும் ஏற்படாதென்று நினைப்பதும் இக்லாஸின் எல்லைக்குப் புறம்பானது. நபிகள் நாயகம் ஸல் அவர்களிடம் "ஈமான் என்றால் என்ன" என்று ஒரு சஹாபி கேட்டார். 'இக்லாஸிற்குப் பெயர்' என்று நாயகம் ஸல் விடையளித்தார்கள். ஆகவே, எந்த அமல் செய்தாலும் அல்லாஹ்வுக்காகவே செய்ய வேண்டும். அவ்வாறின்றி சுயநலத்தை உத்தேசித்தோ பிறருடைய புகழ்ச்சியைக் கருதியோ செய்யப்பட்டால் அது பெரும் கொடிய நோயாகும். நப்ஸுடைய எல்லா கெடுதிகளையும் மனதிலிருந்து நீக்கிவிடுவது சுலபம். ஆனால் பிறருக்குக் காட்டும் பொருட்டு செயல்புரியும் தன்மை மனதை விட்டு நீங்குவது மிக கஷ்டம். இந்நிலை உம்மத்துக்களில் ஏற்பட்டு விடுமோ என்று நாயகம் ஸல் அவர்கள் பயந்திருக்கிறார்கள். புகழுக்காகத் தொழுவதும் நோன்பு வைப்பதும் தர்மம் செய்வதும் பெருங் குற்றமும் ஷிர்க் போன்றதுமாகுமென நாயகம் ஸல் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

## ஆருவது நம்பர்.

## تفريغ وقت

## காலத்தை ஒதுக்கிவைப்பது.

அழியும் தன்மையுடைய இவ்வுலக விவகாரங்களை ஒதுக்கி நம் வயதில் அதிக நாட்களை அல்லாஹ்வுக்குப் பிரியமான வழியில் சேவை செய்வதற்கென அர்ப்பணம் செய்து அவனது கட்டளைகளைப் பிறருக்கு எடுத்துரைப்பான் வேண்டி சொந்த ஊரை விட்டு வெளியிற் சென்று (தன்னுடைய ஈமான்) தன்னுடைய பக்தியை பலப்படுத்திக் கொள்வது மிக முக்கியம். இவ்வாறு செய்வதன் மூலம் மேற்கூறப்பட்ட ஐந்து திட்டங்களையும் உணர்ந்து செயலாற்றும் பழக்கம் உண்டாகிவிடுகிறது. வீட்டிலிருந்துகொண்டும், இவ்வுலக விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டும் மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளவோ பிறருக்கு போதிக்கவோ மறுவுலக வாழ்க்கையைப் பற்றிய கவலை கொள்ளவோ அல்லாஹ்வுடைய பயத்தை யோ மனதில் நிலைநாட்டுவது அநுபவ சாத்தியமற்றதாகும். குறிப்பாக தற்காலம் அது முற்றிலும் நடைபெற முடியாத காரியம்.

ஆகவே துன்யாவுடைய அலுவல்களை ஒழித்து அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இடையூறாய் இருக்கும் காரியங்களைத் தள்ளி விட்டு அவனின் பிரியத்தை நாடி, ஊரை விட்டு வெளியிற் சென்று சன்மார்க்கத்தைக் கற்று, பிறருக்கும் கற்பித்துக்கொண்டிருக்கும் நல்ல அடியார்களுடன்

சேர்ந்து, இவ்வுலகத்திய சொற்ப வாழ்வுக்காக தங்களை அர்ப்பணித்து, ஆகிறத்தினுடைய எல்லையில்லா வாழ்வை மறந்திருக்கும் மக்களை நேர்வழிப் படுத்துவது மிகமிக அவசியம்.

அல்லாஹ்வுடைய கட்டளையை உலகத்தில் பரப்பி அடியார்களை அல்லாஹு தஆலாவின் பக்கம் சேர்த்துவைப்பது நபிமார்கள் (தீர்க்கதரிசிகளின்) வேலையாகும். இவ்வேலை தற்காலம் உம்மத்துகளாகிய நம்முடைய பொறுப்பிலிருக்கிறது. அவர்கள் அல்லாஹ்வின் வழியில் எவ்விதம் தங்களுடைய சௌக்கியங்களை இழந்து சிரமங்களைச் சகித்துச் சேவை புரிந்தார்களென்பதைத் தெரிந்து, நாமும் அவர்களின் உம்மத் என்ற முறையில் அவர்கள் வகுத்துத்தந்த திட்டத்தை அமுல் நடத்தி, தியாக நோக்குடன் சொந்த ஊரைவிட்டு அல்லாஹ்வின் வழியில் புறப்படுவதுதான் அவர்களைப் பின்பற்றுவதும், நேசிப்பதுமாகும். அதுவே காலத்தை ஒதுக்கி வைப்பதின் நோக்கமும், கண்ணியமிக்க சஹாபாக்கள் அல்லாஹ்வுடைய சன்மார்க்கத்தை பரப்புவதின் அவசியத்தையும் அதனால் ஆகிறத்தில் கிடைக்கும் பலனையும் அறிந்திருந்தார்கள். ஆதலால் ஆகிறத்தின் சௌகரியத்தை அடைவதற்காக இவ்வுலகத்தில் கஷ்டத்தையும், துன்பத்தையும் சகித்துக் கொண்டார்கள். அல்லாஹ்வின் வழியில் ஆர்வத்துடன் சென்றார்கள். ஒவ்வொரு காரியத்திலும் மறு உலகத்தையே முன் நிறுத்தினார்கள். இவ்வுலக விஷயங்களை அற்பமாக நினைத்தார்கள். ஆண்டவன் பாதையில் ஊழியம் செய்யும் பொருட்டு பசியை

அடக்கினார்கள். இலை தழைகளையும் புசித்தார்கள். ஒரு பேரீச்சம் சுளையைச் சாப்பிட்டு ஒரு நாள் முழுதும் சேவை செய்தார்கள். பாதரக்ஷைகள் இல்லாமல் கால்களில் பழைய துணியைச் சுற்றிக் கொண்டு பாலைவனத்தில் நடந்தார்கள். இவ்வளவு கஷ்டங்களும் பட்டு, உயிரையும் தியாகம் செய்து, இந்த தீனுல் இஸ்லாத்தின் பிரசாரத்தை நடத்தினார்கள். தற்காலம் அந்த சன்மார்க்க ஜோதி மங்கி விட்டது. அதற்கு வெளிச்சத்தை உண்டுபண்ணுவது நமது கடமையாக இருக்கிறது. ஆதலால் அவர்கள் தியாகம் செய்து தங்கள் கடமையை நிறைவேற்றியதுபோல், நாமும், வீடு வாசலை விட்டு அல்லாஹ்வுடைய வழியிற் செல்வது நமக்குரிய கடமையாகும். இவ்வழியில் சேவை செய்வதால் ஏற்படும் அநேக நன்மைகளும், மேன்மைகளும் ஹதீது ஷரீபில் கூறப்பட்டுள்ளது.

ஹதீது **1**: ஒரு நாள் காலை அல்லது மாலையில் அல்லாஹ்வுடைய வழியில் செல்வது இவ்வுலக முழுவதையும் அதிலுள்ளவை அனைத்தையும் விட சிறந்தது.

ஹதீது **2**: அல்லாஹ்வின் வழியில் சென்ற அடியார்களின் திருவடிகளில் தூசி படுமானால் அக்கால்களை நரகத்தின் நெருப்பு சுடாது.

ஹதீது **3**: பாவச்செயல் நிகழ்வதைச் சிலர் பார்த்து தமக்கு அதைத் தடுக்கக்கூடிய சக்தியிருந்தும், தடுக்காவிட்டால் நிச்சயமாக சீக்கிரம் அல்லாஹ்வுடைய வேதனை அவர்கள் மீது அனுப்பப்படும். இவ்வேதனையில் எல்லோரும் அகப்படுவார்கள்.

ஹதீது 4: நன்மையைப் பரப்பியும், தீமையைத் தடுத்துக்கொண்டும் இருங்கள். அவ்வாறு செய்யா விட்டால் ஆண்டவன் உங்களுக்கு வேதனையை அனுப்பிவிடுவான். அது சமயம் நீங்கள் கேட்கும் துஆ (பிரார்த்தனைகளும்) ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

وَلْتَكُنْ مِنْكُمْ اُمَّةٌ يَدْعُوْنَ اِلَى الْخَيْرِ وَيَأْمُرُوْنَ
بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَاُولٰئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ۔

உங்களில் ஒரு கூட்டம் நன்மையின் பால் அழைக்கவும் தீமையை விட்டுத் தடுக்கவும் இருக்க வேண்டும். அவர்களே வெற்றியடைந்தவர்கள்.3-104

كُنْتُمْ خَيْرَ اُمَّةٍ اُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ
وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُوْنَ بِاللّٰهِ۔

நீங்கள் மிக மேலான கூட்டத்தார். மனித வர்க்கத்தின் நன்மைக்காக ஆண்டவன் உங்களை அனுப்பியுள்ளான். நீங்கள் நன்மையை ஏவுகிறீர்கள். தீமையை விலக்குகிறீர்கள். ஆண்டவன்பால் பக்தி கொள்கிறீர்கள். 3-110.

மேற் கூறப்பட்ட ஹதீதுகளிலும், குர்ஆன் வாக்கியங்களிலும் உம்மத்தின் கடமைகளும் நன்மையைப் பரப்புவதால் கிடைக்கும் பலன் அதை விடுவதால் ஏற்படும் சங்கடம் முதலியவை நன்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு செய்வதில் தான் நம்முடைய க்ஷேமம் இருக்கிறது. இதை விடுவதில் பெரும் நஷ்டம் இருக்கிறது. ஆகவே நமது நாயகம் ஸல் அவர்கள் எவ்வாறு தங்களைத் தியாகம் செய்து வழிகாட்டினார்களோ அதே வழியில் நாமும் சென்று அவர்களைப் பின்பற்றி நடக்க எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

## ஏழாவது நம்பர்.

## ترك لا يعني

### அனாவசியமான காரியங்களை விட்டொழிப்பது.

நம் வயதின் ஒவ்வொரு மூச்சையும் மிகவும் விலையுயர்ந்ததென மதித்து, மறு உலக வாழ்வுக்கான சாதனங்களை சம்பாத்தியம் செய்வதில் அக்கறை கொள்வதவசியம். ஒவ்வொரு முஃமினும் பாவச் செயல்களைவிட்டு ஒதுங்கி, வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்து தன்னுடைய ஆயுளை நற்காரியங்களில் செலவிடவேண்டும். பாவங்களிலும் பயனற்ற விஷயங்களிலும் ஈடுபட்டு வீண் பேச்சுக்களில் மூச்சை செலவு செய்வது கூடாது. அதிக நலனைப் பயக்கக்கூடிய நற்செயல்களில் ஈடுபட்டு பாவ காரியங்களையும் அனாவசியமான செயல்களையும் விட்டு நீங்கிக் கொள்ள வேண்டும்

**ஹதீது 1:** ஒரு சஹாபி இறந்துவிட்டார். மற்றொரு சஹாபி அவரைப் பார்த்து உம்மை சொர்க்கவாதி யென்று நன்மாராயம் கூறப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அப்பொழுது நாயகம் ஸல் அவரைப் பார்த்து, ஏதேனும் அனாவசியமான செயல் அவர் (இறந்தவர்) செய்யநேர்ந்ததா அல்லது கொடுப்பதால் குறையாத கல்வி, நெருப்பு, உப்பு போன்ற பொருட்களை கேட்ட எவருக்கேனும் அவர் கொடாமல் உலோபம் செய்திருக்கிறாரா என்பது உமக்கு தெரியாது ஏன்று கூறினார்கள்.

ஆதலால் நாவை மிகவும் கவனமாய் வைத்துக் கொள்வது அவசியம். எச்சமயம் எந்த வார்த்தை நாவிலிருந்து வெளியாகிறதென்று நமக்கு என்ன தெரியும். ஆகவே ஒவ்வொரு மூச்சையும் காப்பாற்றி நல்வழியில் செலவு செய்ய வேண்டும். குறிப்பாக சன்மார்க்கத்தை கற்றுக்கொள்ளவும், கற்பிக்கவும், வெளியே செல்லுங்காலங்களில் இதை அதிகமாக கடைப்பிடித்தல் வேண்டும்.

ஒருவர் ஹஜ்றத் லுக்மான் ஹகீம் அவர்களை நோக்கி, தங்களுக்கு இவ்வளவு பெரிய அறிவும் ஆற்றலும் எவ்வாறு கிடைத்ததென வினவினார். அதற்கு அவர்கள் நான் உண்மை பேசுகிறேன். அடைக்கலப் பொருளை காப்பாற்றுகிறேன். அவசியமில்லாத காரியங்களை விட்டு தப்பித்துக் கொள்ளுகிறேன் என்று விடையளித்தார்கள்.

சித்தீகீன்களுடைய அடையாளங்கள் தன்னில் பிரகாசிக்க வேண்டுமென்று ஒருவன்

நாடினால், ஹலாலான ஜீபனத்தைச் சாப்பிட்டு சுன்னத்தைப் பின்பற்றி அனாவசியத்தை விட்டொழிக்க வேண்டுமென ஹஜ்றத் ஸஹ்ல்திஸ்தரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மனிதன் சன்மார்க்கத்தை ஒழுகி நடப்பதில் அவசியமற்றதை விட்டுவிடுவது ஒரு தனி விசேஷமாகும் என நபிகள் பெருமானார் ஸல் கூறியுள்ளார்கள். ஆகவே நாமும் அவர்களுடைய வழியைப் பின்பற்றி நடக்க எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிவானாக.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

# تَبْلِيغِى سَفَرْ

# தப்லீக் பிரயாணம்

## سفر کے آداب

### பிரயாண ஒழுக்கமுறைகள்

பிரயாணத்தை நாடி வீட்டிலிருந்து வெளியில் வந்தவுடன் இந்த துஆவை ஓத வேண்டும்.

بِسْمِ اللّٰهِ تَوَكَّلْتُ عَلَى اللّٰهِ لَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ

**பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி**
**லாஹௌல வலா குவ்வத்த இல்லாபில்லாஹ்**

அல்லாஹ்வின் பெயரால் புறப்படுகிறேன். அவனையே நம்பினேன். பாவத்தைவிட்டுத் திரும்புவதும் வணக்கத்தின் மீது சக்தி பெறுவதும் அவனைக் கொண்டே நடைபெறுவன.

2. ஜமாஅத்தாய் புறப்படும் பொழுது ஒருவரை அமீர் (தலைவராக) நியமிப்பது.

3. வாகனத்தில் ஏறும்பொழுது, பிஸ்மில்லாஹ் சொல்லி, வலது காலை வைத்து ஏறி, உட்கார்ந்தவுடன் அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லி இந்த ஆயத்தை ஓதுவது,

سُبْحَانَ الَّذِىْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِيْنَ وَاِنَّا اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ ـ

ஸுப்ஹானல்லதீ ஸஃகர லனா ஹாதா வமா குன்னாலஹு முக்ரினீன் வ இன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்

அல்லாஹு தஆலா தூயவன் (அவன் சக்தியின்றி) நாம் வசப்படுத்திக் கொள்ள முடியாததை நமக்கு கைவசமாக்கினான். நிச்சயமாக நாம் அனைவரும் அவன் பால் செல்பவர்கள்.

4. பின்பு மூன்று தடவை الحمد لله அல்ஹம்துலில்லாஹ்வும், மூன்று தடவை الله اكبر அல்லாஹு அக்பரும் ஓதி கீழ்க்காணும் துஆவை ஓத வேண்டும்.

سُبْحَانَكَ اِنِّىْ ظَلَمْتُ نَفْسِىْ فَاغْفِرْلِىْ فَاِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ ـ

ஸுப்ஹானக இன்னீ ழலம்து நப்ஸீ பஃபிர்லி பஇன்னஹு லாயஃபிருத் துனூப இல்லா அன்த

4. யா அல்லாஹ் நீ பரிசுத்தமானவன் நான் என் மீது அக்கிரமம் செய்துகொண்டேன். என் பாவத்தை மன்னித்தருள் உன்னைத் தவிர (வேறு யாரும்) பாவத்தை மன்னிப்பதில்லை.

5. வாகனம் புறப்பட்டாலும் அல்லது கால் நடைப் பிரயாணம் ஆரம்பித்து விட்டாலும் இந்த துஆவை ஓத வேண்டும்.

யா அல்லாஹ் பிரயாண கஷ்டங்கள், நான் திரும்பி வருவதற்குள் நிலைமை மோசமாகுதல், வெற்றியடைந்த காரியத்தில் குறை ஏற்படுதல், மனம் நொந்தவனின் சாபம், குடும்பத்திலும், பொருளிலும் ஏற்படும் சங்கடம் முதலியவைகளினின்றும் உன்னிடம் காவல் தேடுகிறேன்.

6. உயரமான இடத்தில் ஏறும்பொழுது 'அல்லாஹு அக்பர்' என்றும், கீழே இறங்கும் போது, 'சுப்ஹானல்லாஹ்' என்றும் சொல்ல வேண்டும். மைதானம் அல்லது ஆறு, குளங்களின் பக்கம் சென்றால் 'லாயிலாஹ இல்லாஹ்' ஓத வேண்டும். கால்நடையாகச் செல்ல நேரின் சந்தோஷமாக, நாயகமும், சஹாபாக்களும் இவ்வாறு நடந்திருக்கிறார்களெனக் கருதி ஏற்றுக் கொள்வான். உடம்புக்குச் சிரமத்தைக் கொடுத்து இப்பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள இஃதோர் நல்ல வாய்ப்பெனக் கொள்ள வேண்டும்.

கால் சுளுக்கிக் கொண்டால் அல்லது ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் பிஸ்மில்லாஹ் ஓதுவான்.

ரயில்வே ஸ்டேஷன் அல்லது பஸ், வண்டி நிலையங்களில் இறங்கினால், அல்லாஹ்வின் சிருஷ்டிகளின் தீங்கானதை விட்டும் அவனுடைய பூரணமான வாக்கியங்களைக் கொண்டு காவல் தேடுகிறேன் என்று கூற வேண்டும். ஊருக்குள் நுழையும்போது இதில் எங்களுக்கு பரக்கத் செய் என்று சொல்லி,

اَللّٰهُمَّ ارْزُقْنَا جَنَاهَا وَحَبِّبْنَا اِلٰى اَهْلِهَا

وَحَبِّبْ صَالِحِيْ اَهْلِهَا اِلَيْنَا.

அல்லாஹும்மர்ஸுக்னா ஜனாஹா வஹப்பிப்னா இலா அஹ்லிஹா வஹப்பிப்னு ஸாலிஹீ அஹ்லிஹா இலைனா.

யா அல்லாஹ் இந்த ஊரில் எங்களுக்கு பலனைத் தந்தருள். இவ்வூர் வாசிகளின் நல்ல அடியார்களின் உள்ளங்களில் எங்கள் மீது அன்பையும், எங்கள் உள்ளங்களில் அவர்கள் மீது அன்பையும் உண்டாக்கு என்று சொல்ல வேண்டும்.

சக பிரயாணிகளுக்கு நாம் பணிவிடை செய்வது, நம்முடைய மேலான பாக்கியமெனக் கருதி இயன்ற அளவு ஊழியம் புரிய வேண்டும்.

## அமீருடைய (தலைவர்) கடமைகள்.

1. அமீர் சக பிரயாணிகளின் வசதிகளை கவனிக்கவேண்டும். எக்காரியத்தையும் அவர்களுடன் கலந்தாலோசித்து செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையும் மதித்து நடக்க வேண்டும். ஒருவருடைய அபிப்பிராயம் (அமீருக்கு) சரியானதாகத் தோற்றுமல், மற்றவருடைய அபிப்பிராயத்திற் கொப்ப காரியம் நடத்தினல் (யாருடைய அபிப்பிராயம் கைவிடப்பட்டதோ) அவருக்கு தக்க சமாதானம் கூறி திருப்திபடுத்த வேண்டும்.

2. யாரிடத்திலும் கடுமையாகவோ அதிகாரத் தோரணையிலோ நடந்துகொள்ளக் கூடாது.

3. ஒவ்வொருவரையும் அவரவரின் அந்தஸ்துக்குத் தக்கவாறு நடத்த வேண்டும்.

4. ஜமாஅத்தில் பிரசங்கம் செய்யக்கூடியவர்கள் இருந்தால் அவர்களை பிரசங்கம் செய்யும்படி கேட்டுக்கொள்வது. ஆனல் நம் நோக்கத்திற்கு விரோதமாக பேசுகிருரென்று தெரிந்தால் மனம் நோவாமல் அவர் பேசுவதை நிறுத்தவேண்டும்.

5. ஜமாஅத்து அவசியமில்லாத காரியங்களில் ஈடுபடாமலிருக்கும்படி முடிந்தவரை கவனித்துக் கொள்வது.

6. தஸ்பீஹ், இஸ்திஃபார், ஸலவாத் ஆகியவற்றை ஒவ்வொருவரும் ஓதும்படி செய்து எந்நேரமும் திக்ரு செய்யும்படி தூண்டுவது. விசேஷமாக கஷ்த்து (சுற்று) செய்யும்போது எக்காரணத்தைக் கொண்டும் திக்ரை மறந்துவிடாமல் இருக்கும்படி கவனித்துக்கொள்வது.

7. தஃலீம், கஷ்த்து, பிரசங்கம் முதலிய காரியங்களுக்கு அமீர் முத்தகல்லிம்களை ஜமாஅத்துடைய அமீரே நியமிப்பார். சில சந்தர்ப்பங்களில் தானே அவ்வேலையை மேற்கொள்வார்.

8. ஆறு நம்பர்களைச் சொல்லிக் கொடுத்து பாடமும் கேட்க வேண்டும். காலை, மாலை, சாப்பிடும் போதும், சாப்பிட்ட பின்பும், உறங்கும் போதும், விழிக்கும் போதும், மற்ற சந்தர்ப்பங்களிலும் ஓத வேண்டிய துஆக்களை கற்றுக்கொடுப்பதும், பாடம் கேட்பதும் அவசியம்.

9. விஷயம் தெரியாதவர்களை தெரிந்தவருடன் சேர்த்து பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்வது.

10. தஹஜ்ஜுத், இஷ்ராக், லுஹா முதலிய தொழுகைகளை எல்லோரையும் தொழும்படி செய்வதற்காக சிலரை பொறுப்பாளராக நியமிப்பது.

11. சக பிரயாணிகளில் யாருக்கும் மனச் சங்கடம் ஏற்பட்டால் அதை உடனே சமாதானம்கூறி நிவர்த்தி செய்ய வேண்டும்.

12. அடிக்கடி மறு உலக (ஆகிற) த்தின் சிந்தனையையும் அல்லாஹ்வுக்கு பயந்து நடக்கவேண்டும் என்பதையும் ஞாபகமூட்டுவது. நாம் வெளியிற் செல்வது நம்முடைய சீர்திருத்தத்திற்கே யன்றி பிறரைத் திருத்துவதற்கு அல்ல என்ற விபரத்தை விளக்கிக் கூறுவது.

நாம் வெளியிற் செல்வதன் கருத்தாவது: மார்க்க பக்தியில் சிறந்த மனிதர்களோடு சேர்ந்திருந்து அவர்களுடன் நாமும் தொடர்புகொள்ளவும், திருத்தமான முறையில் தொழுது அதிகமாக திக்ரு செய்யவும், ஒருவருக்கொருவர் பணிவிடை செய்யவும், ஆண்டவனின் பொருத்தத்தைத் தேடிக்கொள்ளவும், நன்மையைச் செய்யவும் கெடுதியைவிட்டு நீங்கிக்கொள்ளவும் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்காகவேயாகும்.

தப்லீகுக்காக எவ்வளவு நேரத்தைக் கொடுக்கின்றோமோ அதில் ஒரு வினாடிகூட நம்மைச் சேர்ந்ததல்ல. அல்லாஹ்வுடைய வழியில் ஒதுக்க (வக்பு செய்ய)ப் பட்ட நேரமாகும்.

ஆகவே அந்நேரங்களில் முடிந்த அளவு மார்க்க விஷயங்களைக் கற்றுக்கொண்டும் கற்பித்துக் கொண்டும் இருப்பது நமது கடமையாகும். நம்முடைய வாழ்நாள் முழுவதும் வீணில் கழித்துவிட்டோம். இந்த நேரத்தையாவது பிரயோஜனமுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் பிரயாணத்தின் ஒழுக்க முறைகளை கடைப்பிடித்து, கடமைகளை நிறைவேற்றி வீடு திரும்பிய பின்பும் பக்தி மார்க்கத்தில் சிறந்து நிற்பவரே நம்மில் வெற்றியடைந்தவ ராவார்.

علم و ذکر

## கல்வியும் தியானமும்.

### தப்லீக் ஜமாஅத்தின் கல்வித் திட்டம்.

1. நற்செயல் புரிவதால் கிடைக்கும் நன்மைகளை பெரியகிதாபுகளில் படித்து பிறரையும்கேட்கச் செய்து அவர்களுக்கு மார்க்க விஷயங்களில் ஆவலை உண்டுபண்ணுவதும் நல்ல அமல்கள் செய்வதின் பலன்களையும் அவற்றை விட்டுவிடுவதால் விளையும் சங்கடங்களையும் உணர்ந்து முடிந்த அளவு சன்மார்க்க வழியில் நடக்கத் தன்னைத் தயார் செய்து கொள்வது மிக அவசியம்.

2. தப்லீக் ஜமாஅத்தின் கல்வி முறையின் முக்கியப் பகுதியாவது, தொழுகையைத் திருத்தமாய்த் தொழவும் குர்ஆன் ஷரீபை சுத்தமாக ஓதவும் கற்றுக்கொள்வதாகும். ஜமாஅத்துடன் வெளியிற் செல்லும் காலங்களில் இதைக் கற்றுக் கொள்ள போதிய சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஆதலால் தஃலீம் நேரங்களில் ஜமாஅத்துடன் கலந்திருந்து நாம் முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் என்னவென்பதை உணர்ந்து அவற்றைக் கற்றுக் கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

3. ஆகிரம் (மறுமை) பற்றிய நினைவை விசேஷமாக தஃலீம் நேரங்களிலும் ஞாபகத்தில் கொண்டுவர வெண்டும்.

4. அநேக முஸ்லிம்கள் சன்மார்க்கத்தை அறியாமலிருப்பது நம்முடைய குறைதான். நமக்குத் தெரிந்ததை அவர்களுக்கு எடுத்துச் சொல்லாமலிருந்துவிட்டோம் என்று படித்தவர்கள் (ஆலிம்கள்) உணர்ந்து வெட்கப்பட்டு இக்குற்றத்திற்காக அல்லாஹு தஆலாவிடம் மன்னிப்புத் தேட வேண்டும். ஆலிமல்லாதவர்கள் இவ்வளவு காலம் சன்மார்க்கத்தைக் கற்றுக்கொள்வதில் அக்கரை காட்டாமல் பொடுபோக்கி விருந்துவிட்டதை நினைத்து வருத்தப்பட்டு இனி அவ்வாறிருக்காமல் சன்மார்க்கத்தைத் தெரிந்து கொள்ள முயற்சியெடுக்க வேண்டும்.

5. எவ்வளவு நேரம் அவகாசம் கிடைக்கிறதோ அந்நேரங்களில் அல்லாஹ்வின் நினைவை மனதிவிருத்தி, திக்ருகளில் ஈடுபட்டு மனதைப் பக்குவமடைய அல்லாஹ்வின் பக்கம் திருப்ப வேண்டும்.

6. படித்தவர்கள் பிறருக்கு போதிப்பதிலும் படியாதவர்கள் கற்றுக் கொள்வதிலும் கொஞ்சம் தெரிந்திருப்பவர்கள் அதிகமாய்த் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதிலும் ஆவல்கொள்ள வேண்டும்.

7. புத்தகங்களைப் படிப்பதாலும் உபதேசங்களைக் கேட்பதாலும் (மட்டிலும்) சன்மார்க்கத்தைக் கற்றுக்கொள்ள முடியாது. ஒவ்வொரு காரியத்தையும் அமல் செய்வதின் மூலம் தான் நாம் மேலும் என்ன செய்ய வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ள முடியும். எக்காரியமும் அமலில் இல்லா

விட்டால் அதன் நினைவு மனதிலிருந்து நீங்கிவிடும் ஆதலால் ஒவ்வொரு விஷயத்தையும் எடுத்து நடத்தி பிறருக்கும் அதை போதிப்பது நமது கடமை என உணர வேண்டும்.

8. தஃலீமில் குர்ஆன் ஷரீபுடைய சூராக்கள், தொழுகை சம்மந்தப்பட்ட மற்ற பாடங்களில் தவறு ஏற்பட்டால் தஃலீம் முடிந்த பின் தனியாக இருந்து பாடத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும். ஊர் திரும்பிய பின்னும் இதில் கவனம் செலுத்தி சுத்தமாய் ஓத அவர்கள் கற்றுக்கொள்வதில் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

9. தஃலீமில் ஸ்தலவாசிகளையும் சேர்த்துக் கொள்வதற்காக கஷ்த்து செய்து அவர்களையும் அழைத்துக் கொள்ள வேண்டும்.

**தஃலீமில் கவனிக்க வேண்டியவைகள்.**

(**a**) தொழுகையில் அகத்தியமாய் ஓதவேண்டிய சூராக்களைக் கற்றுக்கொடுப்பது.

(**b**) அச்சரங்கள் ஜேர் ஜபர் முதலியவற்றைத் திருத்தமாக ஓதச் செய்வது.

(**c**) கலிமாவின் வாசகத்தைத் திருத்துவதுடன் கலிமாவிலிருந்து ஏற்படும் கடமைகளை நிறைவேற்றி வைப்பதற்குப் பெயர்தான் இஸ்லாம் என ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளும் முறையில் கலிமாவின் பொருளையும் கருத்தையும் மனதில் பதியும்படி விளக்கிக் கூறுவது.

(d) தொழுகையில் பர்ளு வாஜிப்களையும் தொழுகையில் ஓதவேண்டிய சூராக்களையும் மற்ற பாடங்களையும் மனனம் செய்து தொழுவதால் ஏற்படும் பிரயோஜனத்தையும் அதை விடுவதால் நேரிடும் பாதகத்தையும் மடக்கி மடக்கிச் சொல்வதும், தொழுகையில் மனதை ஒன்றுபடுத்தி அதைச் சிறந்த வணக்கமாக ஆக்கும் முறையைத் தெரிந்து அதன்படி அமல் செய்வது.

(e) கலிமா, தொழுகை, முஸ்லிமுக்கு மரியாதை செய்வது, கல்வி, தியானம், தப்லீக் செய்வது முதலியவை சம்பந்தமாக குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டுள்ள நன்மைகளைப் பற்றியும் இவைகளை விடுவதால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் பெரிய கிதாபுகளிலிருந்து வாசித்துக் காட்டுவது.

(f) பெருமானார் ஸல் அவர்களின் ஜீவியம் அவர்கள் தீனுல் இஸ்லாமைப் பிரசாரம் செய்த முறை, அதில் அவர்களுக்கு நேர்ந்த சங்கடங்களைச் சகித்துக்கொண்ட முறைகளையும், நம்முடைய நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் சுன்னத்தான முறைகளைத் தெரிந்து நடப்பதும், பெருமானார் ஸல் அவர்களும் ஸஹாபாக்களும், தங்களுக்குப் பெண்டு பிள்ளை, வியாபாரம், விவசாயம் இவை எல்லாமிருந்தும், சன்மார்க்கச் சுடரை உலகம் முழுதும் பரப்புவதில் எவ்வாறு தங்கள் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் தியாகம் செய்தார்கள். ஸஹாபாக்கள், ஸுன்னத்தை எம்முறையில் கடைப்பிடித்து ஒரு நூல் அளவுகூட தவறாமல் நடந்து காட்டினார்கள் என்ற விபரத்தை நன்கு பாடமிட்டுக் கொள்வது.

(ஐ) தப்லீகின் 6 நம்பர்களையும் திரும்பத் திரும்ப பாடமிடுவதுடன், அதே அடிப்படையில் நம்முடைய வாழ்வை நடத்தும் முறையை ஒருவருக்கொருவர் சொல்லிப் பழக்கப்படுத்துவது.

11. காலையும் மாலையும் ஸலவாத், மூன்ரும் கலிமா, இஸ்திஃபார் 100 தடவை ஓதுவது.

**சலவாத்து :**

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ

**அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின் வ அலா ஆலிஹி வ ஸஹ்பிஹி வ ஸல்லிம்.**

**மூன்ரும் கலிமா :**

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاللّٰهُ اَكْبَرُ ○

وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ ○

**ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர். வலா ஹவ்ல வலா குவ்வத இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம்.**

**இஸ்திஃபார் :**

اَسْتَغْفِرُ اللّٰهَ رَبِّيْ مِنْ كُلِّ ذَنْبٍ وَخَطِيْئَةٍ وَاَتُوْبُ اِلَيْهِ

அஸ்தஃபிருல்லாஹ ரப்பீ மின் குல்லி தன்பின் வகதீஅத்தின் வ அதூபு இலைஹி.

இதை காலையிலும் மாலையிலும் ஓதி வர வேண்டும். ஆனால், தலாஇலுல் கைராத், ஹிஸ்புல் அஃலம், முனாஜாதே மக்பூல் போன்ற விர்துகளை ஓதுபவர்கள் அதையே ஓதிவரவும்.

12. வெளியிற்செல்லுங் காலங்களில் எவ்வளவு அவகாசம் கிடைக்கிறதோ அந்த நேரங்களில் அல்லாஹுதஆலாவுடைய திக்ரில் நாவை நடத்திக் கொண்டிருக்க வேண்டும்.

## பிரயாணத்தில் நபில் தொழுகை.

தப்லீக் பிரயாணத்தில் இஷ்ராக், லுஹா, தஹஜ்ஜுத், மஃரிபுக்குப் பின் அவ்வாபீன் என்று சொல்லப்படும் 6 ரக்ஆத் நபில், பர்லான தொழுகைகளுக்குப் பின்னால் ஏற்பட்ட நபில்கள் முதலியவைகளில் கவனம் செலுத்தி அவ்வப்போது தொழுது கொள்ள வேண்டும். ஆனால் உபந்நியாசம் அல்லது கஷ்த் செய்ய வேண்டியது ஏற்பட்டால் நபிலான வணக்கத்தை நிறுத்திவிட்டு இவைகளில் கலந்து கொள்ள வேண்டும். பின்பு சந்தர்ப்பம் கிடைக்கும் போது நபில் தொழுதுகொள்ள வேண்டும்.

# தப்லீகீ تَبْلِيغِى گَشْت கஷ்த்

குஸூஸீ – خصوصى உமூமீ – عمومى

விசேஷமானது. பொதுவானது

கஷ்த்தின் கருத்தாவது: அல்லாஹ்வின் ஞாபகத்திலும் அவனின் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் கவனமில்லாத இடங்களான கடைத்தெரு, முச்சந்திகளுக்கு அல்லாஹ்வை திக்ரு செய்துகொண்டே நடந்து சென்று அந்த இடங்களை அல்லாஹ்வை திக்ரு செய்யக்கூடியதும் அவனின் கட்டளைப்படி நடக்குமிடங்களாகவும் ஆக்குவதாகும். நம்முடைய ஈமான் பலமில்லாததாய் இருப்பினும் பிறரை பலமுள்ள ஈமானின் பக்கம் அழைப்பதால் நம்முடைய ஈமான் உறுதியடைகிறது. இந்த கஷ்த் முறை நபி பெருமான் ஸல் அவர்கள்வீடுவீடாகச்சென்று மக்களை சன்மார்க்கத்தின்பால் அழைத்ததின் எதிரொலியேயாகும்.

2. கஷ்த் போகும்போது பார்வை கீழ்நோக்க வேண்டும். நாவில் திக்ரு செய்துகொண்டு, உள்ளத்தை அல்லாஹ்வின் பால் லயித்து வைப்பதின் மூலம் நாம் யாருக்கு சன்மார்க்கத்தை எடுத்துச் சொல்கிறோமோ அவருடைய மனத்தில் பிரகாசம் ஏற்படும்.

3. தொழுகைக்கு முன்னால் கஷ்த் நடத்த வேண்டும். நாம் யாரைச் சந்திக்கிறோமோ அவருக்கு கலிமாவின் கருத்தை விளக்கி தொழுகைக்காகவும்

நாம் செய்யும் பிரசங்கம் முதலியவைகளில் கலந்து கொள்ளவும் நம்முடன் வருமாறு அவரை அழைக்க வேண்டும்.

4. நாம் காணும் எல்லோரையும் கலிமா சொல்லும்படியும் தொழும்படியும் சொல்லக் கூடாது. அவ்வாறு சொல்லுவது சில சந்தர்ப்பங்களில் இடையூறு விளைவிக்கும். இதற்காக உள்ளூர் வாசிகளை கூடச் சேர்த்து கஷ்த் செய்து அவர்களுடைய அபிப்பிராயப்படி யார்யாருக்கு எவ்வாறு சொல்வதென்று தெரிந்துகொள்ள வேண்டும்.

5. கஷ்த்துக்குப் போகுமுன் அடங்கி ஒடுங்கி அல்லாஹ்விடத்தில் கீழ்க்கண்டவாறு துஆ கேட்டுக் கொள்ள வேண்டும். யா அல்லாஹ் நாங்கள் சக்தியற்றவர்கள். உன்னுடைய உதவியின்றி நாங்கள் ஒன்றும் செய்ய இயலாதவர்கள். எங்களுக்கு உன்னுடைய உதவியைக் கொடுத்தருள். உன் அடியார்களை எங்களின் போதனையினால் உன்னை வணங்கும் மார்க்கத்தில் திருப்பிவிடு. யா அல்லாஹ் எங்களுடைய இந்த அற்ப முயற்சியை நீ ஏற்றுக்கொள். அதை தீனின் பிரகாசமாக்கி விடு. நாங்கள் யாரைச் சந்திக்கிறோமோ அவர்களுடைய கெடுதி எங்களிடம் வராமலும் எங்களுடைய கெடுதி அவர்களைச் சாராமலும் ஆக்கிவை. எங்களுடைய நன்மைகளில் அவர்களுக்கும் அவர்களுடைய நன்மைகளில் எங்களுக்கும் பங்கு கொடு என்று சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு வேறு துஆக்களையும் சேர்த்து ஓதிக்கொண்டு கஷ்த் புறப்படவேண்டும்.

6. யாரிடத்திலும் தர்க்கம் செய்வதும் வீண் கேள்விகள் கேட்டு வாதாடுவதும் கூடாது.

7. கஷ்த் போகும்போது அவசியம் உள்ளூர் வாசிகளில் மார்க்கப் பற்றுள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களைக் கூட்டிக்கொண்டு போவதால் மற்றவர்களும் அவர்களைக் கண்டு உணர்ச்சி பெற்று இவ்வேலையில் சிரத்தையோடு ஈடுபடுவார்கள்.

8. ஒரு ஊருக்குச் சென்றால் அங்குள்ள முக்கியஸ்தர்களிடம் சென்று தற்காலத்தில் சன்மார்க்க நிலை பிற்போக்கிலிருப்பதை எடுத்துக் காட்டி, நம்முடைய வேலைத் திட்டங்களையும் விளக்கி, செயலாற்றுவதின் அவசியத்தையும் சொல்லி இந்த வேலையில் அவர்களையும் ஈடுபடும்படி செய்ய வேண்டும்.

குறிப்பு:- முக்கியஸ்தர்கள் என்றால் மார்க்க பக்தர்கள், பணக்காரர்கள், செல்வாக்குள்ளவர்கள் முதலியவர்களாகும். இவர்களுடன் பேசும்பொழுது அவசியமான அளவுதான் பேசவேண்டும். எச் சந்தர்ப்பத்திலும் திக்ரில் கவனமிருப்பது அவசியம்.

## அழைப்பும், பிரசங்கமும்.

1. பிரசங்கம் மட்டிலும் நமது அசல் நோக்கமன்று. மக்களுக்கு நம் திட்டத்தை எடுத்துச் சொல்வதற்கு பிரசங்கம் ஒரு வழியாகும். கூட்டங்களில் இருப்பவர்களுக்கு நமது திட்டங்களை விளக்குவதில் மேடை பிரசங்கிகளின் போக்கை பின்பற்

றக்கூடாது. ஜனங்களின் விளக்கத்திற்கு தக்க வாறு விஷயங்களைப் பேச வேண்டும்.

2. பிரசங்கத்தின்போது இந்த துன்யா அற்ப கால வாழ்வுதான் என்பதைப்பற்றியும், ஆகிறத்தின் நேமகால வாழ்வை எடுத்துரைத்தும், நூற்றுக் கணக்கான வருஷங்கள் கப்ரில் இருக்க வேண்டும். ஐம்பதினுயிரம் வருடம் மஹ்ஷர் மைதானில் தறிபட்டு இருக்கவேண்டுமென்பதையும் இந்த இடங்களுக்கு நமக்கு வேண்டிய சௌகரியங்களை இவ்வுலகத்திலேயே தேடிக்கொள்ள வேண்டுமென்ற அவசியத்தைப்பற்றியும் விஸ்தாரமாகக் கூறி, அநேக துன்பங்களும், சங்கடங்களும் நிறைந்திருக்கும் நரகலோகத்தைவிட்டும் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மக்கள் மனதில் பதியும்படி எடுத்துக் காட்டி தற்காலம் சன்மார்க்கம் பிற்போக்கிலிருப்பதை விளக்கி அல்லாஹ்வுடைய வழியில் ஊழியம் செய்ய மக்களை அழைப்பது.

3 தப்லீக் ஜமாஅத்துடைய விசேஷங்களைச் சொல்லி மற்ற ஜனங்களையும் ஜமாஅத்துடன் சேர்ந்து வெளியூர்களுக்குச் செல்லும்படி அழைப்பது.

4. இவ்வழியில் ஈடுபடாமலிருப்பதினுல் மேலிடும் சங்கடங்களையும், இந்த பிற்போக்கான காலத்தில் சன்மார்க்க வழியில் எவ்விதம் உறுதியோடு நிற்க வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுவது.

5. பிரசங்கம் செய்பவர் தம்மை ஒரு பெரிய ஆளாகவோ, ஒரு அதிகாரியைப் போல் காட்டி நடந்துகொள்ளவோ கூடாது.

6. நாம் செய்யும் ஒவ்வொரு பிரசங்கத்திலும், தப்லீகுக்காக நம்முடன் வெளியூர்களுக்குச் செல்ல ஜமாஅத்தைத் திரட்டாமலிருக்கக்கூடாது.

## அமீருக்குக் கீழ்படிதல்

அமீருடைய கட்டளையை அனுசரித்து நடக்க வேண்டும். ஆனால் அது மார்க்க விரோதமாக இருப்பின், அதற்கு இணங்குதல் கூடாது. அமீருடைய அபிப்பிராயத்திற்கு, நம் அபிப்பிராயம் மாறுபட்டாலும் அது நமக்கு சிரமமாகத் தெரிந்தாலும், அமீர் நம்மைவிட ஆற்றலில் குறைந்தவராய் இருந்தபோதிலும், அவருடைய அபிப்பிராயப் படியே நடக்க வேண்டும்.

ஹதீது 1. மூக்கு, காது, அறுபட்ட ஒருவர் உங்களுக்கு அமீராக நியமிக்கப்பட்டிருப்பினும் அவர் குர்ஆனுடைய கட்டளையைப் பிறப்பிப்பாராயின், அவருக்கு கீழ்ப்படிந்து கொள்ளுங்கள்.

சில சந்தர்ப்பங்களில் நம்மைவிட தகுதியில் குறைந்தவருக்கு, அமீராய் இருப்பவர் அதிக மரியாதை காட்டுவாராயின் அதை நமது கண்ணியக் குறைவாகக் கருதக்கூடாது.

## சாப்பிடுவதின் ஒழுங்கு

1. சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் இரண்டு கைகளையும் கழுவி, வாய் கொப்பளிப்பது.

بِسْمِ اللهِ وَعَلَى بَرَكَةِ اللهِ

2. "பிஸ்மில்லாஹி வஅலா பரக்கத்தில்லாஹி" என்று சொல்லி சாப்பிட ஆரம்பிப்பது.
3. வலது கையினால் சாப்பிடுவது.
4. பாத்திரத்தின் ஒரு ஓரமாகச் சாப்பிடுவது.
5. ஸுப்ரா (விரிப்பு) விரிப்பது.
6. பாத்திரத்தின் நடுவில் சாப்பிடாமல் இருப்பது.
7. பாத்திரத்தை வழித்துச் சாப்பிடுவது.
8. விரல்களைச் சூப்புவது.
9. மூன்று விரல்களால் சாப்பிடுவது.
10. தின்னும் வஸ்துக்கள் சிந்திவிடுமானால் அதை எடுத்து சுத்தம் செய்து சாப்பிடுவது.
11. சாய்ந்து கொண்டோ அல்லது கர்வமான முறையில் உட்கார்ந்தோ சாப்பிடக்கூடாது. (நபிகள் நாயகம் ஸல் குத்தவைத்து உட்கார்ந்து சாப்பிட்டார்கள் என்று ஹஜ்றத் அனஸ் றலி சொல்லுகிறார்கள்.)
12. சாப்பிட வேண்டுமென்ற அவசியமிருந்தால் மட்டிலும் சாப்பிட வேண்டும். இல்லையானால் சாப்பிடக்கூடாது.

13. பலர் ஒன்று கூடிச் சாப்பிடும்போது நம்முடன் உள்ளவர்கள் சாப்பிட்டார்களா என்பதை கவனித்துக் கொள்வது.

14. பலர் ஒன்று கூடி மிட்டாய் அல்லது வேறு வஸ்துக்கள் சாப்பிடும்போது அவர்கள் ஒன்று சாப்பிடுவதற்குள் மற்றவர் அனுமதியின்றி இரண்டு சாப்பிடுவது கூடாது.

15. பள்ளியிலிருந்துகொண்டு வெங்காயம் சாப்பிடுவதும் அல்லது வெளியில் வெங்காயம் சாப்பிட்டு அந்த வாடையுடன் பள்ளியுள் நுழைவதும் கூடாது.

16. சாப்பிடும்பொழுது ஆரம்பத்தில் 'பிஸ்மில்லாஹ்' மறந்து விட்டால் இடையில்

بِسْمِ اللهِ اَوَّلَهُ وَاٰخِرَهُ

பிஸ்மில்லாஹி அவ்வலஹு வ ஆகிரஹு

என்று சொல்வது.

17. சாப்பிட்ட பின்

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَطْعَمَنَا وَسَقَانَا وَجَعَلَنَا مِنَ الْمُسْلِمِيْنَ۔

அல்ஹம்துலில்லா ஹில்லதீ அத்அமனு வஸகானு வஜஅலனு மினல் முஸ்லிமீன் என்று ஓதவும்.

18. விருந்துண்டால்

اَللّٰهُمَّ اَطْعِمْ مَنْ اَطْعَمَنَا وَاسْقِ مَنْ سَقَانَا۔

அல்லாஹும்ம அத்இம் மன் அத்அமனு வஸ்கி மன் ஸகானு என்பதையும் சேர்த்து ஓதுவது.

19. தண்ணீர் அல்லது பால் அருந்தினால் ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ்வும் முடிந்த பின் அல்ஹம்து லில்லாஹ்வும் ஓத வேண்டும்.

20. ஒரே மூச்சில் குடிப்பதும், பாத்திரத்தில் மூச்சு விடுவதும், ஊதுவதும், கொதிக்கக் கொதிக்கச் சாப்பிடுவதும் கூடாது

21. பால் குடித்து வாய் கொப்பளித்துவிட்டு இந்த துஆவை ஓதவும்.

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْهِ وَزِدْنَا مِنْهُ -

அல்லாஹும்ம பாரிக் லனாபீஹி வஸித்னா மின்ஹு.

## உறக்கத்தின் ஒழுக்கம்

1. உளூ செய்து கொள்வது.
2. படுக்கையை மூன்று தடவை உதறுவது.
3. வடக்கே அல்லது மேற்கே தலையை வைத்து வலது விலாவை கீழே வைத்து, வலது கையை தலைக்கு வைத்து

اَللّٰهُمَّ بِاسْمِكَ اَمُوْتُ وَاَحْيٰى -

அல்லாஹும்ம பிஸ்மிக்க அமூத்து வஅஹ்யா என்று சொல்வது.

4. ஆயத்துல் குர்ஸீ, ஆமனர் ரஸூலு ஓதுவது.

5. சுப்ஹானல்லாஹ் 33, அல்ஹம்துலில்லாஹ் 33 அல்லாஹு அக்பர் 34 தடவை ஓதுவது.

6. உறங்கும் முன்பு சூறத்துல் காபிரூன், சூறத்துல் இக்லாஸ், சூறத்துல் பலக், சூறத்துன்னாஸ் இந் நான்கையும் ஓதி, கையில் ஊதி, முகத்திலும் சரீரத்திலும் மூன்று முறை தடவிக்கொள்வது

7. சூரா அலிப் லாம் மீம் ஸஜ்தாவும், தபாரகல்லதீயும் ஓதுவது.

8. உறங்குவதற்கு முன் கண்களுக்கு 3 தடவை 'சுர்மா' போட்டுக்கொள்வது.

9. விழித்ததும்

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ۔

அல்ஹம்துலில்லா ஹில்லதீ அஹ்யானா
பஃத மாஅமாதனா வ இலைஹின் நுஷூர்.

குறிப்பு :— தஹஜ்ஜுத் தொழுகைக்கு விழிப்பதற்காக சூரத்துல் கஹ்பின் கடைசி ஆயத்தான இன்னல்லதீன ஆமனூவை ஓதுவது இரவில் விழிப்பைத் தரும். (பரீக்ஷிக்கப்பட்டது)

மேற்கூறப்பட்ட ஒழுக்க முறைகள் ஹதீது ஷரீபிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

## உலூவும் தொழுகையும்.

1. பிரயாணத்தின் போது தொழுகை நேரம் சமீபித்துவிட்டால் உலு செய்துகொண்டு வாகனத்தில் ஏற வேண்டும். தண்ணீர் பாத்திரம் அவசியம்

வைத்திருக்க வேண்டும். சில சந்தர்ப்பத்தில் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க நேரிட்டால் பாத்திரத்தைக் கட்டி தண்ணீர் எடுக்கும் பொருட்டு நீளமான கயிறு வைத்துக்கொள்ளுதல் நலம்.

2. ரயில்வே ஸ்டேஷனில் இருக்கும் குழாய்த் தண்ணீரிலும், ரயில் கக்கூஸ் குழாய்த் தண்ணீரிலும் உளூ செய்யலாம்.

3. சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குள் மஃரிபு தொழுகை தொழுதுகொள்ளலாம்.

4. 48 மைல் தூரத்திற்கப்பாலுள்ள இடத்திற்குப் பிரயாணம் செய்தால் ஊரின் எல்லையைக் கடந்த பின் நாலு ரக்அத்து பர்லான தொழுகையை இரண்டு ரக்அத்தாக தொழுவது கடமை.

5. பிரயாணத்தில் தொழுகையை கலா விடக் கூடாது. தொழுகை தவறினல் பிரயாணத்தின் பலன் கிட்டாது. உறக்கத்தினலோ மறதியினலோ தொழுகை நேரம் தவறிவிடுமாயின் அதிசீக்கிரமாக தொழுகையை கலா செய்ய வேண்டும்.

6. நம்மில் அநேகருக்கு கலா தொழுகை அதிகமிருக்கலாம். முடிந்த அளவு துரிதமாக அவைகளை நிறைவேற்றிவிட வேண்டும். தப்லீக் பிரயாணத்தில் அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் கலா தொழுதுகொள்வது சுலபம். பிரயாணத்தில் தவறிய தொழுகையை சொந்த ஊரில் கலா செய்வதானல் இரண்டு ரக்அத்தாகவும் பிரயாணம் (சபர்)

இல்லாத நேரத்தில் தவறிய தொழுகையை பிரயாணத்தில் கலா செய்வதானாலும் பூர்த்தியாகவே தொழவேண்டும். கலா தொழுகை சம்பந்தமான விதிகளை பிக்ஹு, கிதாபுகள், உலமாக்கள் மூலமாக தெரிந்துகொள்ளவும். பர்லான தொழுகைகளுக்கு பாங்கும் காமத்தும் சொல்லி ஜமாஅத்துடன் தொழவேண்டும். தப்லீக் பிரயாணத்தில் ஜமாஅத்துடன் தொழுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

## பிரயாணத்தில் சுன்னத்து தொழுவது.

1. அவசர நேரங்களில் பஜ்ருடைய சுன்னத்து நீங்கலாக மற்ற சுன்னத்தான தொழுகையை விடுவது ஆகும். ரயில் அல்லது பஸ்ஸில் சாமான்களை வைத்துவிட்டு ஒருவர் தொழுது கொண்டிருக்கும் போது தொழுகை முடிவதற்குள் வண்டி புறப்பட்டு விடுமானால் தொழுகையை முறிப்பது கூடும். வாகனத்தில் தொழும்போதும் கிப்லாவை முன்நோக்குவது பர்லாகும். கிப்லா திசை தெரியவில்லை அல்லது திசை காட்டக் கூடியவர் எவருமில்லையானால் அப்போது தீர்க்க யோசித்து எத்திசை கிப்லாவின் திசையென தெரிகிறதோ அத்திசையை நோக்கி தொழவேண்டும். வாகனத்தில் தக்பீர் கட்டும்போது கிப்லா நேராய் இருந்து சிறிது தூரம் சென்றதும் வாகனம் வேறு திசையில் திரும்பிவிடுமானால் தொழுபவரும் கிப்லாவின் பக்கம் திரும்பிக்கொள்ள வேண்டும். நின்று தொழமுடியும்போது உட்கார்ந்து தொழுவது கூடாது.

2. ரயிலில் இடம் நெருக்கடியாக இருந்தால் பக்கத்தி லிருப்பவரிடம் தொழவேண்டு மென்று சொல்லி இடம் கேட்டுத் தொழுது கொள்ள வேண்டும். ரயில் வண்டி நாற்காலிகளிலும், இரண்டு நாற்காலிகளுக்கு மிடையில் உள்ள காலி இடங்களி லும் வசதியுடன் இரண்டுபேர் ஜமாஅத்தாக நின்று தொழலாம். முடிந்த அளவு இமாம் ஜமாஅத்தாகவே தொழ முயல வேண்டும்.

## பல விஷயங்கள்.

1 தப்லீகுக்குச் செல்பவர்கள் பிரயாணச் செலவை தாங்களே செய்து கொள்ள வேண்டும்.

2 ரயில் மோட்டார்களில் ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் பிறரைவிட தான் தாழ்ந்தவ னென்று எண்ணியும் நடந்துகொள்ள வேண்டும். பிற வகுப்பினரிடையே நற்குணத்தோடும் நல் லொழுக்கத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். அவருடன் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் உலகம் முழுவதும் ஆண்டவனை விட்டு தூரமாகி விட்டது. நாம் அவனுடைய கட்டளைப்படி நடந்து பூரண பக் தியை மனதிலிருத்த வேண்டும் என்பன போன்ற விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும்.

3. ஏதேனும் ஒரு ஊருக்குச் சென்றால் அவ் வூர்வாசிகளிடம் கலந்தாலோசித்து தப்லீக் வேலை யைச் செய்ய வேண்டும்.

4. எங்கு சென்றாலும் பள்ளியைத் தவிர வேறெங்கும் தங்கக் கூடாது.

5. அப்பள்ளிகளில் வழக்கமாக எவ்வளவு நேரம் விளக்கெரியுமோ அதற்கதிகமாக நமக்காக விளக்கு எரிக்கக் கூடாது.

6. இஷா தொழுகைக்குப் பின் அவ்வூர்வாசிகள் பள்ளியை விட்டுப் போய்விட்டால் பள்ளி விளக்கை அணைத்துவிட்டு, நமக்காக மெழுகுவத்தி ஏற்றி வைத்துக் கொள்ள வேண்டும் ஜனங்களிடத்தில் படுக்கை, விரிப்பு, சமையல் செய்யும் பாத்திரங்கள் ஆகிய எதையும் கேட்கக் கூடாது.

7. நம் சாமானை கூலிக்காரனிடம் தூக்கும்படி சொன்னால், கூலியை முதலில் பேசிக்கொள்ள வேண்டும். முதலில் பேசிக்கொள்ளவில்லையானால் ஏற்பட்ட கூலியை குறையாமல் கொடுத்துவிட வேண்டும்.

8. தப்லீக் பிரயாணத்தில் ஆடம்பரத்தை விட்டொழிப்பதை பழகிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வினாடியும் மனதை பரிசோதித்துக்கொண்டு, வெளியில் வேலைசெய்து காலத்தை மிக உபயோககரமாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அதிகம் பேசுவதும் சிரிப்பதும் கூடாது. சிரிப்பதால் மன வெளிச்சமும், முகத்தின் பிரகாசமும் குன்றிவிடுகிறது.

9. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் நம்முடைய நிய்யத்தை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். எக்காரியம் செய்தாலும் நன்மையை நாடியே செய்ய வேண்டும்.

10. பிரயாணத்திலிருந்து திரும்பி வரும் பொழுதும் சுன்னத்தான முறையை அநுஷ்டிக்க வேண்டும்.

11 பிரயாணத்திலிருக்கும்போது இடைவிடாதிக்ரும், சிறப்பான தொழுகையும் அடியார்களுக்கு ஊழியமும் எண்ணம் பரிசுத்தமும் எவ்வாறு பழக்கத்திலிருந்தனவோ அவ்வாறே வீடு திரும்பிய பின்னும் பழக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். துஆக்களைப் பாடமாக்கி அந்தந்த சந்தர்ப்பங்களில் ஓதிக்கொள்ள வேண்டும்.

12. தப்லீக் பிரயாணத்தின் அசல் நோக்கம் சுன்னத்தான முறைகளை அறிந்து அவற்றிற் கேற்ப நடப்பதற்குப் பழகிக் கொள்வதே யாகும்.

தப்லீக் அல்லாத மற்ற பிரயாணங்களிலும் அதே முறையை அனுஷ்டிக்க வேண்டும். குறைந்த பக்ஷம் மூன்று நபர்கள் இருப்பினும் ஒருவரை அமீராக்கிக் கொள்ள வேண்டும். முடிந்தவரை இமாம் ஜமாத்தாகவே தொழவேண்டும். தப்லீக் சம்பந்தப்பட்ட புத்தகங்களை தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

## பிரயாணச் சாமான்கள்

13. மிஸ்வாக், தண்ணீர் பாத்திரம், தொழும் முசல்லா, ஊசி நூல், சோப்புக்கட்டி, சாப்பாட்டிற்கு விரிக்கும் ஸுப்ரா, டேலாகட்டி, மெழுகுவத்தி, சுர்மா சீப்பு, பேட்டிரி விளக்கு, அசா முதலியவை.

14. சமையல் செய்ய நேர்ந்தால் அமீர் சொற்படி சிலர் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும். மற்றவர்கள் சன்மார்க்கவேலையில் ஈடுபடவேண்டும். எல்லோரும் ஒற்றுமையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

15. ஒருவர் ஒரு அபிப்பிராயம் சொல்ல, அவ்வபிப்பிராயத்தின்படி அமல் நடக்காததால் பலன் கிடைக்கவில்லையானல் தன்னுடைய சொல்லை ஏற்றுக்கொள்ளாததினல் தான் குறை ஏற்பட்டதென்று அவர் (அபிப்பிராயம் சொன்னவர்) ஜமாஅத்தை குற்றம் சாட்டக் கூடாது. ஆலோசனையில் நம்முடைய அபிப்பிராயத்தை மட்டும் தெரிவித்துவிட வேண்டும். அதன்படியே அமல் நடத்த வேண்டுமென்று நினைக்கக்கூடாது.

16. தஃலீம், கஷ்த் முதலிய நேரங்களில் அடிப்படையான கொள்கைகளையே போதிக்க வேண்டும். கலிமாவின் கடமைகளை விளக்கமாக புரிந்து கொண்டால் மற்ற விபரங்களையும் தெரிந்துகொள்ளும் அக்கரை தானகவே ஏற்பட்டுவிடும்.

17. எந்த ஊருக்குச் சென்ருலும் அவ்வூர்வாசிகள் தப்லீக் விபரங்களை நன்கு தெரிந்து காரியங்களை அவர்களே எடுத்து நடக்கத்தயாராகும் அளவு அங்கு தங்க வேண்டும். காலையில் ஓர் ஊர், மாலையில் ஓர் ஊர் போய் அங்கு கிடைத்தவர்களைக் கொண்டு, கஷ்த் நடத்தியும் பள்ளியில் பிரசங்கம் செய்துவிட்டு திரும்பிவிடுவதும் நம் வேலையல்ல. அதிகநேரம் தங்குவதால் அங்குள்ளவர்கள் இவ்வேலையைத் தெரிந்து அதை வெற்றிகரமாய் நடத்திவைக்க ஏதுவாகும்.

## பிரயாணத்திலிருந்து திரும்பி வந்தவுடன் ஓதும் துஆ.

آئِبُوْنَ تَائِبُوْنَ عَابِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ۔

ஆயிபூன தாயிபூன ஆபிதூன லிரப்பினு ஹாமிதூன்.

*நாங்கள் மீண்டு வருகிறவர்கள்; பாவ மன்னிப்புக் கேட்பவர்கள்; எங்கள் நாயனை வணங்குபவர்கள்; அவனைப் புகழ்பவர்கள்.*

வீட்டில் நுழையும்போது :

اَوْبًا اَوْبًا لِرَبِّنَا تَوْبًا لَا يُغَادِرُ عَلَيْنَا حَوْبًا

ஔபன் ஔபா லிரப்பினு தௌபா லாயுஹாதிரு அலைனு ஹௌபா.

*நான் திரும்பி வந்தேன்; என் குற்றம் மீதியிராமலிருக்கும் முறையில் என் நாயனிடம் பாவ மன்னிப்புக் கேட்கிறேன்.*

*பகல் நேரங்களில் ஊர் வந்து சேர்ந்துவிட்டால் பள்ளிக்குச் சென்று இரண்டு ரக்அத் நபில் தொழுதுவிட்டு நண்பர்களுடன் பேசிவிட்டு வீடு செல்வது நலம். நபிகள் நாயகம் ஸல் இவ்வாறு செய்திருக்கிறார்கள்.*

*தப்லீக் பிரயாண ஜமாஅத்துடன் ஊர் திரும்பிய பின் மீண்டும் தப்லீகுக்குச் செல்ல நேரத்தை ஒதுக்கி வைக்க வேண்டும்.*

# மௌலானா முஹம்மத் இல்யாஸ்ரஹ் அவர்கள் தப்லீக் வேலை செய்பவர்களுக்குச் செய்த சில உபதேசங்கள்.

1. இல்முடைய முதல் வேலையும் பெரும் கடமையுமாவது மனிதன் தன் ஜீவியத்தை ஆராய்ச்சி செய்து தன்னுடைய கடமைகளைத் தெரிந்து அவைகளை நிறைவேற்றி வைப்பதில் முனைவதும் தன் குறைகளை உணர்ந்து தன்னைச் சீர்திருத்துவதில் அக்கரை கொள்வதும் கலிமாவின் முதல் வேலையாகும். ஆனால் தன் கல்வியைக் கொண்டு பிறருடைய செயல்களை ஆராயத் தொடங்கினால் அது பெருமை, கர்வத்தை உண்டாக்கி அறிவாளியை நாசப்படுத்திவிடும்.

2. மனிதன் எந்த சந்தர்ப்பத்திலும் எந்த நிலையிலும் எக்காரியத்தி லிருப்பினும் அவ்வப்போது அல்லாஹ்வின் கட்டளையைக் கவனித்து அதன்படி நடப்பதுதான் உண்மையில் அல்லாஹ்வை திக்ரு (தியானம்) செய்வதாகும். என் நண்பர்களுக்கு இதே திக்ரைத்தான் அடிக்கடி வலியுறுத்திக் கூறுகிறேன்.

3. நமது ஜமாஅத்தின் அசல் நோக்கம்: நமது நாயகம் ஸல் அவர்கள் கொண்டுவந்த சன்மார்க்க விதிகளை முஸ்லிம்களுக்குப் பூரணமாய்க் கற்றுக் கொடுப்பதே யாகும். ஜமாஅத் வெளியிடங்களுக்குப் போவதும் வருவதும் நமது நோக்கத்தின் முதற்படியாகும். கலிமா தொழுகையைச் சொல்லிக் கொடுப்பது நமது வேலைத்திட்டத்தின் ஆரம்பமாகும்.

4. நம் ஜமாஅத் ஒரு விஷயத்தை கெட்டியாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, நம்முடைய தப்லீகையும் அழைப்பையும் ஏற்று கொள்ளப்படா விட்டால் அதுசமயம் மனச் சோர்வடைந்துவிடக் கூடாது. அல்லாஹ்வுடைய வழியில் வேலை செய்வதை மக்கள் கேவலமாய் நினைத்தால் அது நபிமார்களுடைய வழி யென்றும் அவர்களுக்குக் கிடைத்த அந்த பாக்கியம் எல்லோருக்கும் கிட்டாது என்றும் நினைத்துக் கொள்ள வேண்டும். நம்மை மதித்து வரவேற்று மரியாதையாக நடத்தி நம் அழைப்பை ஜனங்கள் ஏற்றுக் கொண்டால் அதை அல்லாஹ்வின் உபகாரம் எனக் கருதி அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். நம்முடைய அழைப்பை ஏற்கும் அவர்களை மதித்து இந்த ஜனங்களுக்கு சன்மார்க்கத்தை போதிக்கும் சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்தமைக்கு அல்லாஹ்வுடைய உபகாரமெனக் கருதி விசேஷமாக அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

5. தப்லீகில் ஊழியம் செய்பவர்களுக்கு எதுவும் சங்கடங்கள் நேர்ந்தால் அவற்றை அல்லாஹ்விடம் முறையிடக் கூடாது. அவ்வாறு நேரிடுவது அல்லாஹ்வுடைய கிருபை அதிகமாகுவதற்கும் நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும் நம் பதவி உயர்வதற்கும் காரணமா யிருக்கும் என தப்லீகில் வேலை செய்பவர்களுக்கு எச்சரித்துவிடுங்கள்.

6. தப்லீகுக்குச் செல்லும் போது மனதை அல்லாஹ்வின் பக்கம் திருப்பி அவனுடைய உத்திரவுக் கிணங்க அவனுடைய வேலைக்காகச் செல்

கிறோம். நம்முடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொண்டல்லவென்றும் நாம் யாருக்கு சன்மார்க்கத்தை போதிக்கிறோமோ அவர்களை நேர்வழியில் கொண்டு வருவது அல்லாஹ்வுடைய கைவசத்தில் இருக்கிறது என்று நாம் நினைப்போமானால் யாருக்கு சன்மார்க்கத்தை போதிக்கிறோமோ அவர் நம்மை அவமரியாதையாய் நடத்தினாலும் நமக்குக் கோபம் வராது. நம்முடைய ஊக்கமும் தளராது.

7. நம்முடைய அழைப்பை யாரும் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அது நம்முடைய தோல்வி என்று நினைப்பது ஒரு கெட்ட பழக்கமாகும். அதை விட்டொழிக்க வேண்டும். பிறருக்கு நேர்மையைப் போதிப்பதுதான் நமது கடமை. அதைச் செய்து விடுவது நமது வெற்றியாகும். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அது அவர்களுடைய தோல்வியேயாகும். யாரையும் நேர்வழியில் திருப்புவது நபிமார்களுடைய பொறுப்பிலும் இருந்ததில்லை. ஆனாலும் முயற்சி செய்வது நமது கடமையென உணர்ந்து அடிக்கடி அவரிடம் சென்று நேர்வழியை போதிக்க வேண்டும்; அவருக்காக துஆவும் செய்ய வேண்டும்.

8. ஒரு ஊரில் உலமாக்கள் இவ்வேலையில் சிரத்தையோடு ஈடுபடாமலிருப்பின் அவர்கள் மீது தவறான எண்ணம் கொள்ளக் கூடாது. இந்த வேலையின் முழு விபரத்தையும் அவர்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்று நினைத்துக் கொள்ள வேண்டும்.

9. நம் ஜமாஅத் எங்கு சென்றாலும் உலமாக்களைச் சந்திக்கும்போது அவர்களிடமிருந்து சன்மார்க்கத்தைத் தெரிந்துகொள்வதற்காகவே சந்திக்கிறோமென்ற எண்ணம் கொள்ள வேண்டும். அவர்களை நம்முடைய வேலைக்கு வரும்படி அழைக்கக் கூடாது. அவர்கள் தீனுடைய காரியங்களை நன்கு தெரிந்து ஊழியம் செய்து அனுபவம் பெற்றிருக்கிறார்கள். ஆதலால் நம்முடைய வேலைத் திட்டத்தை அவர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நமது திட்டப்படி நம் வேலையை நாம் செய்ய வேண்டும். உலமாக்கள் அதைப் பார்த்தால் தாங்களாகவே அதன் பக்கம் கவனம் செலுத்துவார்கள். அச்சமயம் நம் திட்டங்களை மரியாதையுடன் அவர்களுக்கு விளக்கிக்காட்ட வேண்டும். இதைக் கேட்டு அவர்கள் இவ்வேலையில் ஊக்கமாய் தாங்களாகவே ஈடுபடுவார்கள்.

10. நம்முடைய இந்த மகத்தான வேலையில் நம் எண்ணத்தைச் சுத்தப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வுடைய உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து அவன் திருவுளப் பொருத்தத்தை நாடியே இவ்வேலையைச் செய்கிறோமென்று எண்ணம் கொள்ள வேண்டும். இந்த எண்ணம் எவ்வளவு உறுதியடைகிறதோ அவ்வளவு அதற்கு பிரதிபலனுமுண்டு.

11. நாம் நம்முடைய திட்டங்களை எடுத்துச் சொல்ல மக்கள் அதனைப் புரிந்து கொண்டார்கள் என்று மகிழ்ச்சியடையாதீர்கள். லக்ஷக்கணக்கான மக்களுக்கு இதுவரையில் அல்லாஹ்வுடைய கட்டளை

களை நாம் எடுத்துக்கூறவில்லை. எத்தனையோ ஜனங்கள் இவ்வேலையின் தத்துவத்தைத் தெரிந்து ஈடுபடுவதாக வாக்களித்து இதுவரை அதை நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். இக்குறைக்குக் காரணம் நம் முயற்சியின் பலவீனம் தான் என்று கவனித்தறிய வேண்டும்.

12. நாம் செய்த வேலையைப் பிரமாதமாக நினைக்காமல், இனி செய்யவேண்டியதென்ன? நாம் இதுவரை செய்ததில் எதை விட்டுவிட்டோம் அதில் என்ன குறைகள் உள்ளன என்பதை ஆராய்ச்சி செய்து மேல் நடத்தப்படும் காரியங்களில் குறை ஏற்படாமல் பணியாற்றத் திட்டமிடுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

13. தப்லீக் என்றால் பிரசங்கம் பண்ணுவது என்று அநேகர் நினைத்துக் கொள்கிறார்கள். இது தவறு. ஜனங்களுக்கு சன்மார்க்கத்தை போதிப்பதன் மூலம் நபிமார்களுடைய போக்கு இதுதான் என்று ஜனங்கள் புரிந்துகொள்ளும் வகையில் பிரசாரம் செய்வதற்குத் தான் தப்லீக் என்று பெயர்.

14. மக்களுக்கு சன்மார்க்கத்தில் ஊழியம் செய்யும் மனப்பான்மையை உண்டுபண்ணும் வழிகளை ஆராய்ச்சி செய்து யார் யாருக்கு எவ்வகையில் விஷயத்தைச் சொல்ல வேண்டுமோ அதை உணர்ந்து அவர்களுடன் நடந்துகொள்ளவேண்டும்.

15. தப்லீகின் அசல் நோக்கம் பிறருக்கு விஷயத்தை சொல்லிவிடுவது மட்டுமல்ல; போதிப்

பதன் மூலம் தன்னைச் சீர்திருத்திக் கொள்ளுவதே முக்கிய நோக்கமாகும். எனவே வெளியிற் புறப் படும்போது திக்ரு செய்யும் கவனத்திலேயே செல்ல வேண்டும். திக்ரு செய்யாமல் இவ்வேலையில் பயன் காண முடியாது.

16. தப்லீக் ஜமாஅத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டம் போல் எங்கு வேண்டுமானாலும் போகவர இருக்கக்கூடாது. இவ்வேலையில் ஈடுபட்டு தியாகம் செய்த பெரியோர்களை அடுத்து அவர் களின் நடத்தையைப் பின்பற்ற வேண்டும்.

17. தப்லீக் வேலை செய்பவர்கள் பணக்காரர் கள் செல்வாக்குள்ளவர்களை மட்டும் மதித்து அவர்க ளுடன் சேர்ந்து கொண்டு ஏழை மக்கள் தாங்க ளாகவே இவ்வேலைக்கு வந்தாலும் அவர்களின்பால் கவனம் செலுத்துவதில்லை. இவ்வாறு நடப்பது தனி சுயநலமாகும். இது தப்லீகுடைய லக்ஷியத் திற்கு முரணாகும். அவர்களாகவே உங்களிடத்தில் வருவதானது அல்லாஹ்விடத்தி லிருந்து கிடைத்த நன்கொடை என்று நினைவில் வைத்து அவர்களை மதித்து நடவுங்கள்.

18. பெண்மணிகளுக்கு ஒரு விஷயம்: உங்கள் குடும்பங்களிலிருந்து ஆண்கள் இச் சேவையில் ஈடு படும்போது அவர்களுக்கு உபகாரம் செய்யுங்கள். அவர்கள் இப்பணியில் ஈடுபடச் சந்தர்பமளித்து குடும்பத்தின் பாரத்தை நீங்கள் தாங்கிக்கொள்ளுங் கள். அப்படிச் செய்யாவிட்டால் ஷைத்தான் உங் களை ஏமாற்றிவிடுவான்.

19. வெளியிற் செல்லுங் காலங்களில் சொந்த அலுவல்களைத் தவிர வேறெதிலும் கவனம் செலுத்தக் கூடாது. சொந்த வேலையானது கஷ்த், இல்மு திக்ரு, பொதுஜன சேவை, தன்னுடனிருப்பவர்களுக்கு ஊழியம், எண்ணத்தைப் பரிசுத்தப்படுத்துவது, தினசரி நாம் என்னென்ன அமல் செய்திருக்கிறோமென்று எண்ணிப் பார்ப்பது போன்ற விஷயங்களாகும். நாம் ஊரை விட்டு வெளியிற் செல்வது அல்லாஹ்விற்காகவே செல்கிறோம். திருகுர்ஆனிலும் ஹதீதிலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிப்படி அல்லாஹ்விடத்தில் நமக்கு பெரும் பாக்கியமுண்டு. அவனுக்கென்றே ஒரு காரியத்தை செய்வதற்குப் பெயர்தான் பூரண ஈமான். அதுதான் நம்முடைய வேலையின் ஜீவநாடி என்ற எண்ணத்தை மனதில் வேரூன்றச் செய்ய வேண்டும்.

20. முஸ்லிம்களைக் கண்ணியப் படுத்துவதும் உலமாக்களை மதித்து மரியாதையுடன் நடத்துவதும் நம்முடைய தப்லீக் இயக்கத்தின் அடிப்படையான அம்சங்களாகும்.

21 சன்மார்க்கத்திற்கு சேவை செய்வது அல்லாஹ்வின் பொருத்தத்தைத் தேடியும் ஆகிரத்தின் பலனை நாடியும் செய்வதுதான் நமது மூலாதாரக் கொள்கையாகும். ஆனாலும் சந்தர்ப்பத்தை யொட்டி சன்மார்க்க சேவையின் பயனாய் இவ்வுலகில் கிடைக்கும் பலாபலன்களையும் மக்களுக்கு எடுத்துக் கூறி இப்பணியில் ஈடுபடச் செய்ய வேண்டும். அவர்கள் இவ்வழியில் செயலாற்றுவதின் மூலம் இவ்வுலக நன்மைகளைப் பற்றிய ஆவல் மனதைவிட்டு நீங்கி எக்காரிய

மும் அல்லாஹ்விற் கென்றே செய்யும் சிறந்த மனப்பான்மை உண்டாகிவிடும்.

22. பிரசாரத்திற்காக வெளியிற் சென்றவர்களில் ஒருவர் சொந்த ஊருக்குத் திரும்பிப் போவதைப் பார்த்து நாமும் ஊருக்குப் போகலாமென்ற எண்ணம் மற்றொருவருக்கும் வந்தால் அது சமயம் மனதைக் கட்டுப்படுத்தி ஊக்கத்துடன் தப்லீக் வேலையில் ஈடுபட வேண்டும. உதாரணமாக, யுத்த களத்தில் போர் வீரர்கள் பீதியின் காரணமாக பல வாறாகப் பிரிந்து அங்கு மிங்கும் வெருண்டோடிக் கொண்டிருக்கும் போது சுத்த வீரன் எவ்வாறு ஸ்திரமாக நின்று உயிர் நீங்கும்வரை போரிடுவானோ அம்மாதிரி உறுதியுடன் இப்பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் பலன் இவ்வளவு தானென மதிப்பிட முடியாது.

23. ஷைத்தானை விட்டுத் தப்பிக்க அல்லாஹ்வுடைய திக்ரு கெட்டியான கோட்டையாகும். தப்லீக் ஜமாஅத் செல்லும் இடங்கள் கெடுதி நிறைந்த இடங்களாக யிருப்பின் அதிகமாய் திக்ரு செய்து கொண்டே போகவேண்டும். அவ்வாறு செய்வதால் மனு, ஜின், ஷைத்தானுடைய தீங்கை விட்டும் நாம் தப்பித்துக்கொள்ள முடியும்.

24. அல்லாஹு தஆலாவின் சொந்தமான உதவியைப் பெறவேண்டுமானால், அவனுடைய சன்மார்க்கத்திற்குச் சேவை செய்ய வேண்டும். அவ்விதம் நீங்கள் செய்தால், இவ்வுலகில் உங்களுக்கு விரோதமாக உங்களுக்குச் சங்கடங்களை விளைவிக்

கும் வஸ்துக்கள் உங்களுக்கு க்ஷேமத்தைத் தரக் கூடியவைகளாக மாறிவிடுகின்றன. வானம், பூமி, ஆகாயம் இவைகளெல்லாம் உங்களுடைய வேலையை நடத்தி வைக்க ஆரம்பித்துவிடுகின்றன.

25. அல்லாஹ்வுடைய உதவி ஆரம்பத்திலேயே நம்மிடம் வந்துவிடுகிற வஸ்துவல்ல. அல்லாஹ் வுடைய வேலையைச் செய்பவர்களுக்கு அவசியம் நேரும்போது அது தானாகவே அந்தச் சந்தர்ப்பத் தில் வந்து சேர்ந்துவிடும்.

வல்ல ரஹ்மான் நம்மனைவரையும் அவனுடைய ஊழியர்களாக ஆக்கி நல்லடியார்களுடன் சேர்த்து வைப்பானாக. ஆமீன்.

تم الكتاب بعون الملك الوهاب.

## பிரயாணம் ஆரம்பித்தவுடன் ஓதும் துஆ.

اَللّٰهُمَّ اِنِّیْ اَعُوْذُبِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَاٰبَةِ الْمُنْقَلَبِ وَالْحَوْرِ بَعْدَ الْكَوْرِ وَدَعْوَةِ الْمَظْلُوْمِ وَسُوْءِ الْمَنْظَرِ فِی الْاَهْلِ وَالْمَالِ.

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக்க மின் வஃதாஇஸ்ஸபரி வகாபத்தில் முன்கலபில் வல்ஹவ்ரி பஃதல் கவ்ரி வதஃவதில் மல்லூமி வஸூஇல் மனலரி பில் அஹ்லி வல்மாலி.

இதன் பொருள் 33-ம் பக்கம் 3-வது பாராவில் பார்க்கவும்.

——

7B
9 30

<u>கிடைக்குமிடங்கள்</u>

தப்லீக் ஜமாஅத்,
பேகம்பூர் மஸ்ஜித்,
திண்டுக்கல்.

●

S. N. மணியகார் ராவுத்தர்,
தோல் ஷாப்,
பேகம்பூர், திண்டுக்கல்.

●

ராஜா பீடி (பிரான்ச்)
கோட்டைக்குளம் ரோடு,
திண்டுக்கல்.

●

நூருல்ஹக் பிரஸ்,
இஸ்மாயில்புரம்,
மதுரை.

Printed at Noorul Haq Press, Madurai.